திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

மாலை: 8 29—7—55 வெள்ளி : 14 பக்கங்கள் : விலை 3 அணா மலர்: 52

ஆந்திரம் பேசுகிறது!

முதலமைச்சர் கோபாலரின் புதிய குழப்பம்!

ஆந்திர முதலமைச்சர் பி. கோபால ரெட்டிக்கு சென்னை நகரசபை விருந்துபசாரம் செய்து பெருமைபடுத்திற்று. இந்த விருந்துபசாரம் செய்வது எதற்கென்று சிலர் கேட்கக்கூடும். தோழர். கோபால ரெட்டி ஆந்திராவின் முதலமைச்சர் பதவியை சுமந்து கொண்டு சென்னை வந்தாரல்லவா ஆதலின் அந்தச் சுமையினுல் ஏற்பட்டுள்ள சிரமங்களுக்கு சிறிது டானிக் கொடுப்பதைப் போல, சென்னை நகரசபை கோபாலருக்கு விருந்துபசாரம் அளித்ததாம்! அந்த வகையில் சென்னை நகரசபையின் பெருந்தன்மையைப் பாராட்ட வேண்டியதுதான்,

வடநாட்டு ஏகாதிபத்திய முகாமிலிருந்து அடிக்கடி சென்னை வந்து செல்லும் சில திருமேனிகளை வரவேற்று உபசரித்து வரும் சென்னை நகரசபை, திராவிடத்தின் ஒரு பகுதியாகிய ஆந்திர முதலமைச்சருக்கு—சென்னை மாநிலம் (ஆந்திரம் பிரிவதற்கு முன்) ஒரே குடும்பமாக இயங்கி வந்தபோது அக்குடும்பத்தை நிர்வகித்து வந்தவர்களில் ஒருவரான கோபாலருக்கு விருந்துபசாரம் நடத்தியதில் வியப்போ அன்றி தவறே இருக்க முடியாது.

அதுபோலவே அவ்விருந்துபசாரத்தை ஏற்ற ஆந்திர முதலமைச்சர் கோபாலரும், ஆந்திரம்-தமிழகம் ஆகியவைகளுக்கிடையே என்றென்றும் நிலவ வேண்டிய ஒற்றுமையையும் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்! இந்த எண்ணம் மேலும் வளர வேண்டும் என்பதுதான் நமது ஆசையுங்கூட.

எனினும், கும்பலில்கோவிந்தா போடுவதுபோல், ஆந்திர முதலமைச்சர் விருந்துபசாரத்தின் போது பேச்சோடு பேச்சாகத் தெரிவித்த சில கருத்துக்களைப் பற்றி குறிப்பாக அவருக்கும் பொதுவாக ஆந்திர மக்களுக்கும் எடுத்துக் காட்டவேண்டியது நம் கடமையாகும்.

"சென்னை நகரின் தனிச்சிறப்பை நினைக்குந்தோறும், சென்னையில் சில நாட்கள் தங்கியிருப்பது எனக்கு பெரும் மகிழ்ச்சியை உண்டாக்குகிறது. இவ்வித பெருமை படைத்த சென்னை நகரம் தமிழர்களுக்குமட்டுமல்லாது அனைவருக்கும் சொந்தமானதாக யிருக்க வேண்டும்'

என்று ஆந்திர முதலமைச்சர் தமது விருந்துப் பேச்சில் மிக நாசூக்காக குறிப்பிட்டிருக்கிறார்,

சென்னை நகரம் தனிச் சிறப்புடையதாலேயே அனைவருக்கும் சொந்தமானதாயிருக்க வேண்டும் என்று பேசும் மனப்பான்மையே மிகமட்டரகமானதாகும். கோபால ரெட்டியின் இந்த எண்ணத்திற்கு அவரின் பாணியிலேலே உதாரணம் கூறினல் அவருக்கு உடம்பெரிச்சல் ஏற்படக்கூடும். எனவே அவரது பேச்சின் தன்மையை விவரிக்காது விடுக்கிறோம்.

சென்னை நகரம் தமிழகத்தின் தலைநகரம் என்ற முடிவேற்பட்ட பின்னரும் ஆந்திர முதலமைச்சர் பழைய குப்பையைக் கிளறி முகர்ந்து பார்க்கத் துணிவது கண்டு வியப்படைகிறோம். ஒரு முடிவுக்கு வரப்பட்ட பிரச்னையைப்பற்றி ஆந்திர முதலமைச்சர் மிகக் "கெட்டிக்காரத் தனமாக" குட்டை குழப்ப எண்ணினரேயன்றி, ஆந்திரம் — தமிழகம் ஆகிய இருபகுதிகளுக்குமிடையே முடிவுக்கு வராத பிரச்னைகளைப் பற்றி—ஆந்திர — தமிழ் மக்களிடையே நீடித்திருக்க வேண்டிய உறவுக்கு முட்டுக் கட்டையாயுள்ள பிரச்னைகளைப் பற்றி—தமது கருத்தைத் தெரிவித்திருப்பாராஞல்—இரு சார்பினருக்கும் ஓரளவு நியாயம் வழங்கக்கூடிய வகையில் அப்பிரச்னைகள் முடிவுற வழிவகை கூறியிருந்தால் ஆந்திர முதலமைச்சரின் அரசியல் யூகத்தையும், மனவளத்தையும் நாம் பாராட்டி யிருக்க முடியும்,

ஆந்திர—தமிழ்ப் பகுதிகளுக்கிடையே நிலவிவரும் எல்லைப் பிரச்னைகள் உள்ளிட்டவைகளைப் பற்றி தாமாக ஒன்றும் கூறுவதற்கில்லை யென்பதாக ஆந்திர முதலமைச்சர் பசப்புவதாயிருந்தால், அதுபோலவே முடிவுக்கு வந்த ஒரு பிரச்னையைப் பற்றி அதாவது சென்னை நகரத்தைப் பற்றி பேசுவதென்பது விஷமத்தனம் என்று நாம் குறிப்பிட விரும்பவில்லை யெனினும் வெந்த புண்ணில் வேல் கொண்டு குத்துவதற்கு ஒப்பாகும் என்பதை ஆந்திர முதலமைச்சர் இனியாவது உணருமாறு அறிவுறுத்துகிறோம்.

"ஆந்திர மக்கள் தரும் ஏராளமான வரிப்பணத்தை டெல்லி ஆதிக்கம் சுரண்டிச் செல்லுகிறது, இங்கேயோ பற்ருக்குறை பட்ஜெட். ஏறத்தாழ மூன்றரை கோடி ரூபாய் துண்டுவிழுகிறது; இப்பள்ளத்தை நிறப்ப ஆந்திர மக்களின் மீது மேலும் வரியைத் திணிப்பது நேர்மையல்ல. புகையிலை வரியால் மட்டும் ஆந்திராவிலிருந்து ஆண்டுதோறும் 19 கோடி ரூபாய் எடுத்துச் செல்லும் இந்தியப் பேரரசிடமிருந்து துண்டுவிழும் மூன்றரை கோடி ரூபாயைக் கேளுங்கள். அதற்கு தைரியமில்லாமல் ஆந்திர மக்கள் மனவேதனையுடன் தரும் வரிப் பணத்தை மேலும் உயர்த்துவது மனிதத்தன்மையாகாது" என்று ஆந்திர ராஜ்ய காங்கிரஸ் தலைவர் இடித்துக் கூறிவருகிறார்.

அதற்காவன செய்ய அஞ்சி நிற்கும் ஆந்திர முதலமைச்சர், திட்டிய மரத்தில் கூர்பார்க்கும் "பெரிய மனிதர்" பாணியில் சென்னை நகரத்தைப் பற்றி தமது "மேதாவித்தனமான" கருத்தைக் கூறுகிறார்!

ஆந்திரத்தையும், தமிழகத்தையும் சேர்த்துச் சுரண்டும் வடநாட்டு ஏகாதிபத்தியத்தைத் தட்டிக் கேட்பதில் தமக்குள்ள அறிவாற்றலைக் காட்ட வேண்டிய தோழர் கோபால ரெட்டி சொந்தக் குடும்பத்திலேயே புதிய குழப்பத்தை உண்டாக்குவது விவேகமான செயலல்ல என்பதுடன், ஆந்திர—தமிழ் மக்களிடையே நிலைத்திருக்க வேண்டிய நட்புறவுக்குக் கேடு பயப்பதாகும் என்பதையும், சென்னை நகரசபை விருந்துபசாரத்தில் வெட்டிப் பேச்சுப் பேசிய ஆந்திர முதலமைச்சருக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

ஆந்திரம் ஆதரித்ததா ?

திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கையை ஆந்திரம் ஆதரிக்கிறதா?—கேரளம் கேட்கிறதா—கன்னடம் கடைக்கண்ணாலாவது பார்த்ததா? என்றெல்லாம் சந்துக்கடை சிந்துப்பாட்டு பாடி வரும் 'தலை கொடுக்கும் பிரகஸ்பதிகள்' அரசியல் விழிப்படை

11-ம் பக்கம்

புரட்சிக் கவிஞரின் வெற்றி

புதுவையில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் காங்கிரசை எதிர்த்து (மக்கள் முன்னணி அபேட்சகராக) போட்டியிட்டு 1684 வாக்குகள் பெறாறு வெற்றியடைந்தார்.

இவரை எதிர்த்து நின்ற அன்சாரி என்ற காங்கிரஸ்காரர் 1403-ம், முனுசாமி என்பவர் 830 வாக்குகளும் பெற்று தோல்வி யடைந்தனர்.

வள்ளுவர் உணர்த்திய வாய்மை

குறள் நெறிக் கழகத்தின் வேண்டுகோளுக்கேற்ப இன்று நாடெங்கும் வள்ளுவர் விழா கொண்டாடப்படுகின்றது. தமிழர் வதியும் இடமெல்லாம், இலங்கை, மலாயா, போன்ற வெளி நாடுகளிலும் கூட குறள் முழக்கம் கேட்கிறது. 'திருவள்ளுவர் நாள்' கூட்டங்களும், திருக்குறள் விரிவுரை நிகழ்ச்சிகளும் ஆங்காங்கே நடைபெறுகின்றன. உண்மைத் தமிழ் உணர்வு கொண்டோர் அனைவரும் மேற்கண்ட செய்தி அறிய புளகாங்கித மடையாமலிரார் — திராவிடரனைவரும்பெருமையும் பூரிப்புங்கொள்கின்றனர்.

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாட்டில் உருவாகிய திருக்குறள், இது வரை "மறை"யாகவே வைக்கப்பட்டு இன்றுதான் ஓரளவு மக்கள் மன்றத்திலே நடமாட ஆரம்பித்துள்ளது. திருக்குறளைப் பற்றித் தமிழகம் தெரியாதிருந்த காலமும் இருந்தது! பண்டிதர்கள் தங்களது பாண்டித்யத்தைக் காட்டுவதற்காக ஒப்புவிக்கின்ற வாய்ப் பாட்டாக கருதியிருந்தனர். புலவர் தங்களது புலமைக்கு அத்தாட்சியாக ஓரோரிடங்களில் பிறர் புரிந்து கொள்ளாத வகையில் பாடி வந்தனர் ஒரு சில குறட்பாக்களை மாத்திரம்.

தமிழாசிரியர் எனப்பட்டோரும் பிறரும் "தங்களுக்கும் குறள் தெரியும்!" என்று காட்டிக் கொள்வதற்காகவே குறளைப் பயன் படுத்தினரே தவிர அதன் ஒப்பற்ற கருத்துச் செல்வத்தை உணர வேண்டுமென்றோ — உணர்ந்து உலகுக்கு வழங்க வேண்டுமென்றோ பயின்றனரல்லர். வேற்று நாட்டவரான ஜி. யூ. போப் போன்றவர்கள்தான் திருக்குறளைக் கற்று உணர்ந்து, போற்றிப் புகழ்ந்த தோடன்றித் தத்தமது மொழிகளிலும் மொழி பெயர்த்து வழங்கினர். மாற்றாருக்கு இருந்த அக்கரை கூட வள்ளுவரின் வழி வந்தோருக்கு இல்லாமலிருந்தமைக்கும் காரணமில்லாமலில்லை.

திருவள்ளுவர் 1330 பாக்கள் பாடியுள்ளார் என்றால் அதில் ஒரு பாட்டுகூட ஆண்டவனின் அவதாரங்களைப் பற்றியோ அவனது லீலா விநோதங்களைப் பற்றியோ பாடினாரில்லை. மகேசனது மனங்கோணுத வண்ணம் நடக்கின்ற அடியார்களையும் அவர்களிடத்தில் 'திருவிளையாடல் புரியும்' பரமனையும் பற்றிக் கவலைப்படவில்லை. கவிதை பாடவில்லை. வாழ்வு மாயை என்று வரட்டு வேதாந்தம் கூறாமல் வாழ்க்கையின் வெற்றிக்கு வழிகாட்டியுள்ளார். மானிட வாழ்வை முப்பெரும் பிரிவுகளாக—அறம், பொருள், இன்பம் என்று முப்பாலாக வகுத்து அரும்பெரும் நீதிகள் அடங்கிய பாடல்கள் தொகுத்துள்ளார். 'வாலறிவன்' என்றும்'வேண்டுதல்'வேண்டாமை இலான்' என்றும் பொறிவாயில் ஐந்தவித்தான் என்றும் கடவுள் இலக்கணம் பாடியதின்மூலம் சர்க்கரை பொங்கல் முதல் சாராயம் வரை படையல் கேட்கின்ற 'சாமி'களையும் பெண் வேட்டையாடும் பிரான்களையும், சேலை திருடி லீலை நடாத்தும் ஜீவாத்மாக்களையும் நன்கு சாடி யிருக்கின்றார் திருவள்ளுவர். கடவுள் பெயரால் கடைபிடித்து வருகின்ற சாதி முறைகளையும் கண்டித்துள்ளார், தெய்வத்தால் முடியாத செயலைக்கூட முயற்சி வெற்றியாக்கும் என்று கூறியுள்ளார். பதி, பசு, பாசம் பற்றியும் பாவம் நரகம் பற்றியும் பாடவேயில்லை வள்ளுவர்.

ஆகவே திருக்குறளின் ஒவ்வொரு பாட்டும் தமது கொள்கைக்கும் இலட்சியத்திற்கும் நடைமுறைக்கும் முறணானதாக உள்ளதைக் கண்ட மத 'மேக்கர்களும்' சாதி வழியினரும், பழமை விரும்பிகளும் அதை வெறுத்ததோடு, அதன் உயரிய கருத்துக்கள் நாட்டில் பரவ, தங்களது ஆதிக்கத்திற்கும் செல்வாக்கிற்கும் ஆபத்து என்பதை அறிந்து, குறளை மூடி மறைக்கும் திருப்பணியிலும் இடைச்செருகல் முயற்சியிலும் ஈடுபட்டு வந்தனர். அரசியல் துறையிலும் கல்விப் பணித் துறையிலும் அவர்களே முன்னணியில் இருந்தமையால் அவர்களது விருப்பப்படியே, குறளை மக்களின் மத்தியிலே உலவவிடாது செய்து வந்தனர். மேலும் திருவள்ளுவர்ஒரு 'முப்புரியினராக' பிறவாமையும் அவரது புகழ் பரவாமைக்கு காரணமாகும்.

கடந்த இருபது முப்பது ஆண்டுகளாக தமிழ் நாட்டில் வளர்ந்து வருகின்ற புதிய உணர்ச்சி காரணமாகக் குறள் புறக்கணிக்கப் படுவதின் காரணங்களை ஓரளவு மக்கள் புரியத் தலைப்பட்டுள்ளனர். பண்டிதர்க

சண்முகம் குலசேகரன்

ளின் நாவிலே, புலவர் வீட்டு ஏட்டுச் சுவடியிலே, தமிழாசிரியரின் கையிலே மட்டும் தவழ்ந்த திருக்குறளை தொட்டிகளிலும், பாமரர் குடிசைகளிலும் முழங்கச் செய்து மாணவர்கள் மனதிலும் பதியச் செய்து எங்கும் குறள் மணம் கமழச் செய்த பெருமை யாரைச் சார்ந்தது, எவரது முயற்சி என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. தமிழுலகு நன்கு அறியும்.

உலக இலக்கியங்களிலே, உயர்ந்த ஒப்பற்ற நீதி நூலாக வழங்குகின்றது நமது திருக்குறள். சமுதாயம், பொருளாதாரம், அரசியல் ஆகிய எத்துறையை எடுத்துக் கொண்டாலும் சரி வேறு எந்த மொழியிலும், எந்த நாட்டிலும் இது வரை வெளிவராத, உயர்ந்த-மக்கள் வாழ் வாங்கு வாழ்வதற்கேற்ற-கருத்துகளை உள்ளடங்கியதாக வுள்ளது ஆதலால் தான் திருக்குறள் பல நாட்டவராலும் போற்றப்பட்டு இது வரை கிட்டத்தட்ட இருபதுக்கு மேற்பட்ட பிற மொழிகளில் பெயர்த்தெழுதப்பட்டுள்ளது. குறளின் கருத்தாழங் கண்ட மேனாட்டு ஆசிரியர்கள் சிலர் அதன் பொருட் சுவையை முழுக்க முழுக்கப் பெற, "நாம் தமிழராகப் பிறக்கவில்லையே!" என்று வருந்துகின்றனர்.

அவ்வளவு உயர்ந்த இலக்கியங்கள் கடந்த பல நூற்றாண்டு காலமாக நமது தமிழ் மக்களுக்குப் பயன்படாது மண்ணில் புதை மாணிக்கமாக இருந்தது நமது தீய பேறேயாகும்.

133 வகைக் கருத்துப் படையல் கொண்டது வள்ளுவரது குறள். அதில் ஒன்று வாய்மையைப் பற்றினதாகும். நமக்கு இதுவரை போதிக்கப்பட்ட நாம் இதுவரை கற்ற அத்தனை நூல்களும் "உண்மையே பேச வேண்டும். பொய்யுரைக்கக் கூடாது" என்று கூறுகின்றன. யாரும் இதை மறுத்துரைக்கவும் முயல்வது கிடையாது; இந்துமத சாஸ்திரங்களும் புராணம் போன்றவைகளும் "பொய் பஞ்சமா பாதகங்களில் ஒன்று; பொய் பேசினவன் நரக தண்டனை அடைவான்" என்று எச்சரிக்கின்றன. அதே போன்று இஸ்லாமியர் போற்றும் "திருக்குரானும் கிறிஸ்தவர்களது வேதம் 'பைபிளும்'' மற்ற மத நூல்களும் "பொய் பேசுவது குற்றம் என்றும் பாவம் என்றுமே கூறியிருக்கின்றன. ஆனால் ஆச்சரியமடையும் விதத்திலே வள்ளுவர் கூறுகிறார், 'பொய் சொல்லலாம்' என்று மத வாதிகளும் அவதார புருஷர்களும் கூடச் சொல்லப் பயப்படுகின்ற ஒரு கருத்தை வள்ளுவர் கூறுகிறார், தைரியமாக- அக்கருத்து மக்களுக்கு நன்மை பயக்கும் என்று தனது நுண்மாண் நுழை புலத்தால் ஆய்ந்து அறிந்த காரணத்தால்

'ஏ மனிதனே! நீ பொய் சொல்லலாம். நீ சொல்லக்கூடிய பொய் குற்றம் ஏதும் அற்ற நன்மை பயக்க ஏதுவாயிருப்பின் அஃது பொய்யாகாது. உண்மைக்குச் சமமானதாகும்' என்று ஒரு குறளில் கூறியுள்ளார்.

'பொய்மையும் வாய்மை யிடத்த புரை [தீர்த்த
நன்மை பயக்கு மெனின்'.

வாய்மை—உண்மை என்பது எது என்பதைத் தெளிவான முறையில் விளக்குகின்றார் மற்றொரு பாட்டில். நடந்ததை, கண்டதை, கேட்டதை மாற்றம் ஏதுமின்றி அப்படியே கூறுவது உண்மையாக மாட்டாது; அக்கூற்று தீமையோ கெடுதியோ பிறருக்கு உண்டாக்காமல் இருந்தால்தான் உண்மையின் வகையைச் சாரும் என்று.

'வாய்மை எனப்படுவது யாதெனின் [யாதொன்றும்
தீமை யிலாத சொலல்'.

என்ற குறளின் மூலம் தெளிவு படுத்தியுள்ளார். பிறருக்குத் தீமை ஏற்படச் செய்கின்ற உண்மை, பொய்யைச் சேர்ந்ததாகும். மற்றவருக்கு நன்மையைத் தரக்கூடிய வகையில் சொல்லப்பட்ட பொய்மையும் வாய்மையைச் சேர்ந்ததாகும் என்ற சிறந்த கருத்தை ஒன்றே முக்கால் வரி கொண்ட குறளில் இவ்வளவு அழகாகச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ள அறிவுத் திறமையைப் பாராட்டாமல இருக்க முடியுமா?

ஒவ்வொரு குறளும் ஒப்பற்ற, உயர்ந்த நீதியை உட்கொண்டதாக இருக்கின்றது. மனிதன் தனது வாழ்க்கையின் வழிகாட்டியாகக் கொள்வதற்கேற்றது திருக்குறளாகும். தமிழனது பெருமைக்குச் சான்றாக கம்ப ராமாயணத்தையும் மகாபாரதத்தையும் காட்டுகின்றனர் சிலர். அறுபதினாயிரம் மனைவிகளைக்கொண்ட தசரதன் மூலமாகப் பெண் கொடுமை போதிக்கின்ற ராமாயணமும், ஒரு பெண் ஐந்துக்கு மேலான ஆடவர்களை ஆசை நாயகர்களாகவும், அன்புக் கணவர்களாகவும் அடைகின்ற ஒழுக்கக் கேட்டிற்குச் சிபாரிசு செய்கின்ற மகாபாரதமும் குறளின் காலடியில் நிற்கக் கூட அருகதை இல்லாதவையாகும்.

உலக அரங்கிலே நமது பெருமையையும் நம் இலக்கியச் சிறப்பையும் வானுயரச் செய்துள்ளது திருக்குறள் ஒன்றேயாகும். நாம் அதை புரிந்து கொள்வதற்கு முன்னரே உலகு போற்றுகிறது வள்ளுவரை. இவ்வித உயர்ந்த செல்வமாகிய திருக்குறளை தமிழகமெங்கும் பரப்ப சென்னை குறள்நெறி கழகத்தார் கடந்த ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் இவ்வாரத்தை திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாட முன்வந்துள்ளதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம். எனவே, திருக்குறளின் உட்கருத்துக்களைக் கற்று அதன் வழி நடந்து உய்வோமாக!

வளர்க குறள் நெறி!

கம்யூனிஸ்டு காதல்!

பி. நெடுமாறன், மதுரை

‘இந்தியாவின் அயல் நாட்டுக் கொள்கையும், முற்போக்குத் தன்மையும் ஜனநாயகப் பண்பும் ஏகாதிபத்திய எதிர்ப்பும், ஆசிய ஒருமைப் பாடும் ஏற்பட்டிருப்பதற்கு நேருஜியின் முயற்சியே காரணம்.’

எவ்வளவு தெளிவான தீர்மானம்! காங்கிரஸ் கமிட்டியில் நிறைவேறியிருக்க வேண்டிய இந்தத் தீர்மானம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியில் நிறைவேறியிருக்கின்றது, தோழர் தேபார் முன்மொழிய தோழர் பந்த் வழிமொழிய காங்கிரஸ் கூடாரத்தில் நிறைவேற வேண்டிய இந்தத் தீர்மானம்! அஜாய்கோஷும், கோபாலரும் கூடிய கம்யூனிஸ்ட் பாசறையில் நிறைவேறியிருக்கிறது. விந்தையான நிகழ்ச்சிதான்!

நேருவிடம் முற்போக்கு தன்மை மிளிருகிறதாம். ஜனநாயகம் அரும்புகின்றதாம். ஏகாதிபத்திய எதிர்ப்பு காணப் படுகின்றதாம். ஆசிய ஒருமைப்பாடு நிலவுகின்றதாம். அடாடா! மலையைக்கெல்லி எலியை பிடிக்கின்றார்கள் இந்திய கம்யூனிஸ்டுகள்!

பஞ்ச நதிகள் பாய்ந்தோடும் பாஞ்சாலத்திலே நேருவின் சீடர்கள் அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டிருக்கின்றார்கள். உரிமை முழக்கமிடத்தடை, ஊர்வலம் செல்லத் தடை, கூட்டம் கூட்டத் தடை. இந்நிலையிலே எண்ணுயிரவர் சிறை புகுந்திருக்கிறார்கள். அது மட்டுமா, கோர அடக்குமுறையும் தாண்டவமாடிற்று அங்கே—பாஞ்சாலத்திலே. இது ஒருபுறம் நடக்க மறுபுறத்தில் கான்பூரில் கடந்த 75 நாட்களாக பல்லாயிரம் தொழிலாளிகள் வெறும் வயிற்றுடன் வீதிவலம் வந்து கொண்டிருந்தார்கள். கேட்பதற்குநாதியில்லை,

தென்னகத்து மக்களின் விருப்பத்திற்கு விரோதமாக நேருவின் சர்க்கார் ஆதிபத்திய ஆசையால் அலக்கழிக்கப்பட்டு, இந்தியை தென்னகமெங்கும் புகுத்த முயற்சிக்கின்ற வெறிச் செயலை அழிக்க தென்னகத்து மக்கள் வீறுகொண்டு ஒரு புறம் கிளர்ந்தெழுந்து கொண்டிருக்கின்றார்கள்,

இப்படி நாடெங்கும் நேருவின் ஆதிபத்தியத்தைத் தகர்த்தெறிய முற்போக்கு எண்ணங் கொண்டோர் போராடி வரும் இவ்வேளையில், மார்க்ஸியத்தின் தத்துப்புத்திரர்களாக தங்களை தாங்களே கூறிக் கொள்ளும் பரந்த கண்ணோட்டக்காரர்கள் நேருவின் மீது கரைகாணா காதல் கொண்டு அரவணைக்கக் கிளம்பியிருக்கின்றார்கள்.

அக்காதலிலே சிக்குண்டுள்ள கம்யூனிஸ்டுகள்— வழக்கம்போல நம்மீதும் வசைமாரி பாட ஆரம்பித்திருக்கின்றார்கள். நம் கழக ஏடு ‘நம் நாடு’ மாஸ்கோவும் கான்பூரும் என்ற தலையங்கத்தில் கான்பூர் தொழிலாளரின் அவதியை விளக்கி, அவர்தம் துயர் துடைக்க வேண்டிய நேரு அதே நேரத்தில் மாஸ்கோ வீதிகளிலே மகிழ்ச்சியுலா வந்து கொண்டிருப்பதைக் கண்டித்திருந்தது. இதில் என்ன தவறு? நாட்டில் உள்ள தம் மக்களின் அவதி போக்கித் துயர் துடைக்க வேண்டிய நாட்டின் நாயகன், வெளிநாடுகளிலே விருந்து உண்டு வீண் மகிழ்ச்சி கொண்டு உலா வருவதென்ருல் அதனைச் சுட்டிக் காட்டுதல் தவரு?

எனினும் ‘ஜனசக்தி’ கொதித்துக் கிளம்பி சுட்டி முனையை நம் மீது திருப்பி, நீ யார் இதைக் கேட்க எனக் குதிக்கிறது.

நேருவின் பரமார்த்திக சீடர்கள் எடுத்து வீச வேண்டிய சொற்சிலம்பை, மாாக்ஸின் சீடர்கள் வீசுகின்றனர்-

நீ யார்? என ஆணவ மொழி புகன்றிடும் தோழர்களே, நாங்கள் யாரென்று கூறுகிறோம் தெரிந்துகொள்ளுங்கள். இன்று நீங்கள் புதிய உறவு கொண்டாடி பூரித்துப் போற்றித் திருப்பா, பாடி ஏற்றிப்புகழும் இதே நேரு பண்டிதர் ஆட்சி முறைதான் அன்று சேலம் சிறையிலே, இருபத்திநான்கு இளங் காளைகளை சுட்டு வீழ்த்தியபோது, நாட்டிலே தட்டிக் கேட்க நாதியற்றிருந்த நேரத்திலே, ஊர்தோறும் அந்த ஆணவச் செயலை எடுத்தியம்பி கண்டித்தவர்கள் நாங்கள்தான்.

இருபத்திநான்கு பிணங்கள் சாய்ந்து, உதிரம் பெருக்கெடுத்தோடி இத்திருவிடத்தை நனைத்த கோரக் காட்சியை நீங்கள் மறந்து இன்று நேருவுடன் உறவாடலாம். ஆனால் இருபத்திநான்கு தமிழ்க் காளைகளின் உயிரைக் குடித்த பாசிசக் காங்கிரசின் போக்கை தன்மானமுள்ள எவரும் மறக்க மாட்டார்கள். புல்கானின் கைலாகுபெற்று குதூகலித்துள்ள நேரு வீசும் கடைக்கண் வீச்சில் சிக்கியிருக்கும் வெகுஜனப் போராட்டக் காரர்களுக்கு இன்று அந்த இருபத்திநான்கு சடலங்களும் தெரியாது. எனவேதான் செய்நன்றி மறந்து நீயார்? என்ற கேள்வியை ‘ஜனசக்தி’ எழுப்புகின்றது.

கடந்து சென்ற காலத்திலே, நேரு பண்டிதரின் ஆட்சியிலே, நாட்டிலே எத்தனை முறை துப்பாக்கிகள் மக்களை நோக்கி பேசியிருக்கின்றன. எத்தனைச் சடலங்கள் உயிரற்று வீழ்ந்திருக்கின்றன. எவ்வளவு பேர் வெஞ்சிறைகளிலே, வெங்கொடுமை சாக்காட்டிற்கு ஆளாகி வேதனையுற்றார்கள்? இன்னும் எத்தனை பேர் இருண்ட சிறைகளிலே கிடந்து வதை படுகின்றார்கள்? எத்தனை முறை ஜனநாயகத்தின் கழுத்தை நெறித்துவிட்டு, தனது சீடர்களை பதவி பீடங்களில் நேரு ஏற்றியிருக்கின்றார். இவைகள் அத்தனையும் அறவே மறந்துவிட்டு நேரு ரஷ்யா சென்று திரும்பினார் என்ற ஒரே காரணத்திற்காக அவருக்கு அடிதெண்டம் போடப் புறப்பட்டிருக்கிறது கம்யூனிஸ்ட் ஏடு ‘ஜனசக்தி’!

1948ல் நேருவை சியாங்கேஷேக்குடன் ஒட்பிட்டு, தெலிங்கானா நடத்திய இந்திய கம்யூனிஸ்டுகள், இன்னும் இந்த நேரு அன்று அமெரிக்கா சென்று திரும்பிய போது அவரை அமெரிக்கக் கைக்கூலி என வசைபாடிய இதே கம்யூனிஸ்டுகள் இன்று ரஷ்யா சென்று திரும்பியதற்காக நேரு பதிகம்பாடுவதைபார்க்கும்போது பரந்த கண்ணோட்டக்காரர்களின் அரசியல் சரக்கு எவ்வளவு மட்டமானதாகவும் குப்பை கூளம் நிறைந்ததாகவும் இருக்கிறதென்பதையே எடுத்துக் காட்டுகிறது.

மாஸ்கோவில் நேரு தந்த மாம்பழங்களைச் சுவைத்த புல்கானின் ‘கான்பூர் கிளர்ச்சியைப் பற்றி நேருவிடம் வினவினால் நேரு என்ன பதில் கூறுவார் என ‘நம் நாடு’ கேட்டவுடன் கொதித்துக் குதித்த நேருவின் மாண்பு உனக்கென்ன தெரியும் எனக்கேட்கும் கம்யூனிஸ்டுகளே நேருவின் ஆட்சி முறையில்—அல்லது அயல்நாட்டுக் கொள்கையில்தான் எந்த ஜனநாயகப்பண்பை கண்டீர்கள்?

கேரளத்திலே காங்கிரசார் நடத்திய கொடுமைகளை மறந்து விட்டீர்களா? கூச் பீகாரிலே பசி பசியென பதறிய மக்களுக்குத் தோட்டாக்கள் பரிசளிக்கப்பட்டது உங்கள் நினைவில் இல்லையா? சேலத்திலே, வேலூரிலே, குன்றத்தூரிலே, கல்லக்குடியிலே தூத்துக்குடியிலே இன்னும் பல இடங்களிலே நேரு தர்பாரின் துப்பாக்கிகளிலிருந்து குண்டுகள் சீறிக்கிளம்பி பதைபதைக்க பலரை மண்ணிலே வீழ்த்தியதை மறந்தீர்களா?

தென்னகத்தின் வளங்கொழிக்கும் தேயிலை தோட்டங்கள் யாவும் வெள்ளையர் கையில் சிக்கிக் கிடப்பதையும், இன்னும் அவர்கள் சுரண்டுவதையும் அனுமதித்து வரும் நேரு பண்டிதர் அதே வேளையில் தென்னகத்தின் திரு வீதிகளிலே ஆயிரமாயிரமானோர் வேலையற்று வாடிவதங்குவதை தடுக்க வழியேதும் வகுக்காது இருப்பது உங்கள் கண்களுக்குப் புலப்பட வில்லையா?

நேருவின் வெளி நாட்டுக் கொள்கையை பாராட்டும் கம்யூனிஸ்டுகளே, அன்று மலாயாவில் தமிழர்கள் உயிருக்கு ஊசலாடிய வேலையில், இதே நேரு வெள்ளையருடன் காமன்வெல்த் உறவுகொண்டதை மறந்து விட்டீர்களா ?

பிறந்த பொன்னாட்டில், வளங்கொழிக்கும் இத் தென்னாட்டில் வாழ வழியற்று, வகையற்று, கலமேறிக் கடல் கடந்து, இலங்கை சென்று, காடுதிருத்திக் கழனியாக்கிய திராவிடர் இன்று அகதிகளாய் திக்கற்றுத் தவிப்பதைத் தவிர்க்கவேண்டிய நேரு பண்டிதர், தும்பைவிட்டு வாலைப் பிடிப்பது போல ஏதேதோ பேசித்திரிவது உங்களுக்குக் கொதிப்பூட்ட வில்லையா? நமது உடன் பிறந்தார் பெருக்கிடும் கண்ணீரை நீங்கள் காண வில்லையா ?

எட்டாண்டு கால நேருவின் ஆட்சியிலே எந்த உயர்ந்தப் பண்பை கண்டீர்கள், தேர்தலிலே தோற்று, மக்கள் மன்றத்தில் இருந்து விரட்டப்பட்ட தனது சீடர்களை பதவிப் பீடங்களில் அமரச் செய்த இந்த நேருவையா ஜனநாயகப் பண்பு நிறைந்தவர் எனக் கருதுகின்றீர்கள் ?

அண்டை நாடான பாகிஸ்தானை ஒரு திட்ட வட்டமான முடிவுக்கு உடன்படச் செய்ய முடியாமல் வேதாந்தம் பேசி வரும் நேரு ஆட்சியின் அயல் நாட்டுக் கொள்கையை, சின்னஞ் சிறு நாடான இலங்கை அங்கு வாழும் தமிழர்களுக்கு இழைக்கும் அநீதியை அகற்ற வழியேதும் காண முடியாத இந்த நேரு பண்டிதரின் அயல் நாட்டுக் கொள்கையையா ஆதரிக்கின்றீர்கள். வியக்கின்றோம் தோழர்களே வியக்கின்றோம். அதே நேரத்தில் வேதனையும் எங்கள் உள்ளங்களில் எழாமலில்லை.

ஒருபுறம் உலகம் ஒத்து வாழ வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்திக் கொண்டே, உள் நாட்டில் எதிர்க் கட்சிகளை அழித்தொழித்துவிட கங்கணம் கொண்டு சர்வாதிகாரப் பாதையிலே நடைபோட்டுவரும் நேரு பண்டிதரின் ஆட்சி முறைக்கா லாலி பாடுகிறீர்கள்? இந்தியக் கம்யூனிஸ்டுகளின் தலைமைப் பீடம் இரட்டை நாக்குடையது என்று அரசியல் யூகம் படைத்தவர்கள் கூறிவருவதற் கேற்ப வன்றோ உங்கள் நடவடிக்கைகள் காட்சியளிக்கின்றன.

நேருவின் அயல்நாட்டுக் கொள்கைக்கு ஆதரவாம்! உள்நாட்டுக் கொள்கையில் எதிர்ப்பாம்! இந்திய கம்யூனிஸ்டுகள் இவ்வளவு மட்டரகமான அப்பாவித்தனத்திற்கா ஆளாகவேண்டும்? வெளி நாடுகளில் பெரும் விளம்பரத்தைக் கூறியல்லவோ நேரு பண்டிதரும் அவர்களது சகாக்களும் உள்நாட்டில் ஆதிக்கத் தர்பார் நடத்துகின்றனர். இந்தத் தெளிவுகூட கம்யூனிஸ்ட்டுகள் பெறவில்லையா அல்லது வடநாட்டு ஆதிக்கத்துடன் கூட்டு பேரமா? அந்தோ இரட்டை நாக்கர்களே! பரிதாபம்! பரிதாபம்!

டாட்டா டால்மியா, பிர்லா, பஜாஜ் போன்றாரின் கைப்பாவை இந்த நேரு என உங்கள் அகராதிப்படி கருதப்பட்டு வந்த நேரு பண்டிதரின் ஆட்சியை எப்படி நம்பி, எவ்விதம் நம்பி திடீரென காதலிக்க ஆரம்பித்துவிட்டீர்கள்? கேட்டால் கோபிக்கிறீர்கள் அட பாவமே, உங்கள் புரட்சி இப்படியா பிசுபிசுத்திட வேண்டும்! எல்லாம் மாஸ்கோ வைத்தியத்தின் மகத்துவம் போலும்! இந்த லட்சணத்தில் எங்கள் மீது பாய்கிறது ‘ஜனசக்தி’ வெட்கம்! வெட்கம்!

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

●

வணக்கம். ஜூலை முடிய பட்டியல் இன்று அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கான தொகையை தாமதமின்றி உடன் அனுப்பி வைக்குமாறு நினைவூட்டுகிறோம்.

நிர்வாகி—'திராவிடன்'

திராவிடன்

சென்னை : 29—7—55 : வெள்ளி

ஜினிவா சர்க்கஸ்!

★

ஜினிவாவில் நடைபெற்ற நான்கு வல்லரசுப் பிரதமர்கள் மாநாட்டைக் குறித்து அம்மாநாடு நடைபெறுவதற்கு முன்பு, (15–7—55-ம் வெளியீட்டில்) இதே பகுதியில் நமது கருத்தை வெளியிட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் உலக சமாதானத்தை நிலைநிறுத்தவே 'அவதாரம்' எடுத்துள்ளது போ•வும், அவரின் ரஷ்ய சுற்றுப் பயணத்தாலேயே ஜினிவா மாநாடு வெற்றிகரமாக முடியப் போகிறதென்றும் தேசியப் பத்திரிகைகள் பத்தி பத்தியாக எழுதின. தேசியத் தலைவர்களும் இவ்வாறு கித்தாப்புப் பேசினர்.

இவர்கள் இவ்விதக் கித்தாப்பு தேடிக் கொள்வதில் நமக்கொன்றும் நட்டமில்லை. ஆனால் உண்மையிலேயே உலக சமாதானத்தை நேரு பண்டிதரின் சுற்றுப்பயணம் சாதித்திருக்கின்றதா என்பதே நமது கேள்வியாகும்,

ஜினிவாவில் கூடிய நான்கு வல்லரசுப் பிரதமர்கள் மாநாட்டில் ஐரோப்பிய பாதுகாப்பு, ஜெர்மனி ஐக்கியம் ஆகியவைகளைப் பற்றி விவாதிப்பதுதான் முக்கிய நோக்கமாகக் கொள்ளப்பட்டதேயன்றி உலக அமைதிக்குப் பாதகமாக எந்தப் பகுதியில் கொந்தளிப்பு வளர்ந்து வருகிறதோ அதனைத் தீர்க்க வழிவகை காணாமல் அப்பிரச்னைகளை வல்லரசுப் பிரதமர்கள் கைநழுவவிட்டதானது மாநாட்டிற்கு ஒரு பெருந் தோல்வியேயாகும்.

நிற்க, ஐரோப்பிய பாதுகாப்பு, ஜெர்மனி ஐக்கியம் குறித்த பிரச்னைகளிலாவது ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வரப்பட்டதா யென்றால் அதிலும் ஏமாற்றமே.

ஏதோ உலகம் என்பது ஐரோப்பாவும் அமெரிக்காவும் மட்டும்தான் என்ற மமதையான எண்ணம் வல்லரசுகளின் மனதைவிட்டு அகலாத வரையில் உலக சமாதானத்துக்காக வல்லரசுப் பிரதமர்கள் கூடிப் பேசியதில் வெற்றி கிடைத்துவிட்டது என்று கூப்பாடு போடுவது பித்தலாட்டத்திற்கு ஒப்பாகுமேயன்றி வேறில்லை.

நாம் ஏன் இவ்வாறு கூறுகிறோமெனில் ஆசியாவைப் பற்றிய பிரச்னைகளை வல்லரசுப் பிரதமர் மாநாடு முக்கியமாகக் கருதவில்லையென்றே தெரிவதால். ஆனால் உலக சமாதானத்துக்குத் தடையாய் நிற்கும் பிரச்னைகளோ ஆசியப் பகுதியில்தான் வளர்ந்து வருகின்றன. இந்தோ-சீனா, பார்மோசா பற்றிய சிக்கல்கள் தீர உடனடிப் பரிகாரம், மக்கள் சீனா ஐ. நா. சபையில் இடம் பெறுதல் ஆகிய பிரச்னைகள் தீர்ந்தாலன்றி உலக சமாதானம் உருப்பட முடியாது.

இதனை அரசியல் மேதைகள் பலமுறை உலக வல்லரசுகளுக்கு எடுத்துக்காட்டியிருக்கின்றனர் எனினும் ஐ. நா. சபை உள்பட அண்மையில் கூடிய வல்லரசுப் பிரதமர்கள் வரை இதுகுறித்து போதிய அக்கறை காட்டவில்லை. மேற்கத்திய வல்லரசுகளின் தகராறு தீர்ந்து விட்டால் மற்ற நாடுகள் தங்களின் ஜாடை அறிந்து நடந்து கொள்ளத்தான் வேண்டும் என்ற கிறுக்கு வல்லரசு நாடுகளின் மண்டையில் ஊறிப்போயிருக்கிறது, இந்நிலையில் ஜினிவா மாநாட்டில் வெற்றி என கொக்கரிப்பதில் அர்த்த மிருக்க முடியுமா யென்று கேட்கிறோம்.

ஜினிவாவில் மாநாடு முடிந்து வல்லரசுப் பிரதமர்கள் மாநாடு குறித்துத் தங்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளதில் ரஷ்யப் பிரதமர் புல்கானின் 'மக்கள் சீனத்தை ஐ. நா. சபையில் சேர்த்துக் கொள்ளும் பிரச்னை குறித்து ஜினிவா மாநாட்டில் யோசனைக்கு வராதது குறித்து பெரும் ஏமாற்றமேயாகும்' என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

நிற்க, ஜெர்மன் ஐக்கியம், ஐரோப்பிய பாதுகாப்பு, தாராளமான போக்குவரத்துக்குள்ள தடைகளை நீக்குதல் ஆகியவைகளிலாகிலும் நான்கு வல்லரசுப் பிரதமர்கள் மனம் விட்டுப்பேசி ஒரு முடிவுக்கு வந்தனராயெனின் அடுத்து அக்டோபரில் இந்நான்கு வல்லரசுகளின் வெளிநாட்டிலாகா அமைச்சர்கள் மீண்டும் கூடிப்பேசி அதற்கு ஒரு வழியைக் கண்டுபிடித்து தங்கள் பிரதமர்களிடம் கூறுவார்களாம். பின்னர் அவ்வழியே நடைபோட்டு உலக சமாதானத்தைக் கண்டுபிடிப்பார்களாம்!

மலையைத் தூக்கி தலை மீது வைத்தால் சுமந்து செல்லுகிறேன் என்றானும் ஒரு பேர்வழி! அதுபோலவே வல்லரசுநாடுகளின் வெளிநாட்டிலாகா அமைச்சர்கள் கூடிப் பேசி சிக்கலைத் தீர்த்தால், பிறகு வல்லரசுப் பிரதமர்கள் உலக சமாதானத்தை எங்கும் ஓடவிடாமல் கட்டிப் போடுவார்கள் போலிருக்கிறது! அதுமட்டுமல்லாமல் அக்டோபரில் நடைபெறப் போகும் வல்லரசு நாடுகளின் வெளிநாட்டிலாகா அமைச்சர்கள் மாநாட்டில் கூட, ஆசியப் பிரச்னைகளைப் பற்றி யோசிக்க மாட்டார்களாம்! ஜினிவா பேச்சையே தொடர்ந்து நடத்துவார்களாம்.

ஆக இவையனைத்தையும் ஆழ்ந்து சிந்தித்தால் சர்க்கஸ் காட்சியில் நாய், ஆடு, புலி, சிங்கம் ஆகியவைகள் ஒன்றாகச்சேர்ந்து தண்ணீர் குடிப்பது போல, ஜினிவாவில் நான்கு வல்லரசுப் பிரதமர்கள் மாநாடு என்ற பேரால் இணையற்ற சர்க்கஸ் காட்சி ஒன்று நடைபெற்றிருக்கிறதென்றே கூறலாம்.

இந்த ஜினிவா சர்க்கஸ் காட்சி நடைபெறுவதற்கு நேரு பண்டிதரின் ரஷ்ய பயணமே காரணம் என்று கூறிக் கொள்ளலாமேயன்றி உண்மையிலேயே உலக சமாதானம் தழைக்க ஜினிவாமாநாடு பயன்பட்டிருக்கிறது என்று கூறப்படுமேயானால் சமாதானம் என்ற பேரால் உலக மக்கள் கண்களிலே மண்ணைத் தூவியதற்கே ஒப்பாகும்.

ஆசியப் பகுதியில் வளர்ந்துவரும் கொந்தளிப்புக்கு ஆவன செய்யும் மனவளம் பெறாமல் வல்லரசுப் பிரதமர்களோ அல்லது அவர்களின் வெளிநாட்டிலாகா அமைச்சர்களோ அக்டோபரில் மட்டுமல்ல—மாதம் ஒரு மாநாடு கூட்டினாலும் ஏதோ ஒரு சர்க்கஸ் காட்சியைப்போலத்தான் கருதப்படும்.

நேரு பண்டிதரின் உலக யாத்திரையும் அதுபோன்றே ஜினிவா சர்க்கஸ்களுக்கு விளம்பரம் செய்யும் வேலைக்குஇலக்காகுமேயல்லாது நடைமுறையில் உலக சமாதானம் காணுவதென்பது பெரும் ஏமாற்றமாகவே முடியும், எனவே வல்லரசுகள் தங்களின் வரட்டு ஜம்பத்தை விடுத்து உண்மையான சமாதானத்திற்கு குறைந்த அளவிலாகிலும் பணியாற்ற முனையுமாறு தெரிவித்துக் கொள்கிறோம்.

●

நடக்க இருப்பவை

சென்னை 4-வது வட்டம் இளைஞர் முன்னேற்ற மன்றம்

30—7—55 சனி மாலை 6 மணிக்கு சென்னை பாண்டியன் திடலில் (கல்லறை மைதானம்) பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்கள் தலைமையில் தோழர்கள் டி. கே. சீனிவாசன், இளம்பரிதி, மு. பெருமாள் ஆகியோர் பேசுவர்.

சென்னை மாவட்ட தி. மு. கழக செயற்குழுக் கூட்டம்

31—7—55 ஞாயிறு காலை 9 மணிக்கு இராயபுரம் அறிவகத்தில் நடைபெறும். அதுசமயம் பொதுக்குழுவிற்கு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தலும், மற்ற முடிவுகளும் செய்யவேண்டியிருப்பதால் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகை தருமாறு செயலாளர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

புழல் தி. மு. கழகம்

4—8—55 வியாழன் மாலை 6 மணிக்கு புழல் கடைத்தெரு திடலில் தோழர் எம். கணபதி அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், கவிஞர் கண்ணதாசன் பேசுவர்.

குன்னூர் தி. மு. கழக சிறப்புக் கூட்டம்

தி. மு. க. மாநில மாநாட்டு நிதிக்காக நீலகிரி—கணேசா டாக்கிசில் 7—8—55 காலை 11-மணிக்கு சிறப்புக் கூட்டம் நடைபெறும் அதுசமயம் தோழர், என், வி நடராசன் "திராவிடர் இயக்கமும் அறிஞர் அண்ணா அவர்களும்"—தோழர் டி. கே. சீனிவாசன் "கலையும்வாழ்வும்"—நாகவை ஆர். எஸ் பாண்டியன் "நாட்டுப் பிரிவினையும் இளைஞர்களும்" என்பது குறித்து பேசுவர். இசைமுரசு நாகூர் அனீபா குழுவினரால் இசை விருந்தும் அளிக்கப்படும். அன்று இரவு பகுத்தறிவு நாடகமன்றத்தார் நடிக்கும் பரப்பிரம்மம் நாடகமும் நடைபெறும்.

நன்கொடை :— ரூ. 5, 3, 2, 1.

பெண்களுக்கு அணா 12.

ஈரோட்டில் தி. க. தோழர்கள் கைது

ஆகஸ்டு 1-ம் தேதி நடைபெற யிருக்கும் கொடி எரிப்பு போராட்ட அறிவிப்புச் சுவரொட்டிகளை ரோடுகளில் ஒட்டியதற்காக ஈரோடு தி. க. முக்கியஸ்தர்களான பெருமாள், மூத்து ஆகியோர் போலீசாரால் கைது செய்யப்பட்டனர். சுவரொட்டிகளும் கைப்பற்றப்பட்டனவாம்.

சென்னை சட்டசபைக் கூட்டம்

சென்னை சட்டசபைக் கூட்டம் ஆகஸ்டு 1-ந் தேதி ஆரம்பமாகிறது. இக்கூட்டம் 10-ந் தேதியோடு முடிவடையும் என்று தெரிகிறது,

இக்கூட்டத்தில் 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி விவாதிக்கப்படுமென்றும், இந்திய சர்க்கார் உத்தியோகங்களுக்காக நடக்கும் பரிட்சையில் இந்தியில் எழுதவேண்டுமென்ற இந்திய சர்க்காரின் போக்கினை எதிர்த்து தீர்மானம் ஒன்று கொண்டுவரப்படுமென்றும் தெரிகிறது.

இலங்கைத் தோழர்களுக்கு

'நம் நாடு'

இதழ் கிடைக்குமிடம்

வி. எஸ். முருகன்

82/13, குமார வீதி, கொழும்பு

கேள்வி? பதில்.

— அஞ்சாநெஞ்சன் —

கே : அய்யா அஞ்சா நெஞ்சன் அவர்களே, தி. க. நடத்தும் ஆகஸ்டு போராட்டத்தில் தி. மு. க. கலந்து கொள்ளுமா?

—பி. பி. நாராயணசாமி, பி. கே. புதூர்

ப : தி. மு. க. பொதுச்செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையைப் படித்து விவரம் அறியவும் தோழரே.

•

கே : தேசியக் கொடி எரிப்புபற்றி உங்கள் கருத்தென்ன?

—ராசு, சுக்ரவார்பேட்டை, கோவை

ப : என் கருத்து என்பதாக ஒன்றும் சொல்வதற்கில்லை. அது முறையுமல்ல. எனவே நான் சார்ந்துள்ள தி. மு. கழகத்தின் சார்பில்பொதுச்செயலாளர்விடுத்துள்ள அறிக்கையைக் காண வேண்டுகிறேன்.

*

கே : அய்யா அஞ்சா நெஞ்சனே, உங்கள் இயக்கத் தந்தை ராமசாமிப் பெரியார் இருக்கிறாரே—அவர் தேசியக் கொடியை எரிப்பது நாகரீகமா—அநாகரீகமா?

—பெத்தபெருமாள், வடசென்னை

ப : அய்யா பெத்தபெருமாளே—நீர் இக்கேள்வியை என்னைக் கேட்பது அரசியல் நாகரீகமாகுமா என்பதையோசித்துதெளிவு பெறவும்.

*

கே : அஞ்சா நெஞ்சனே, கட்டாய இந்தியை எதிர்ப்பதற்காக தந்தை பெரியார் அவர்கள் சொல்லும் போராட்டத்தில் ஈடுபட வேண்டாம் என்று அறிக்கைகள் பிரசுரிக்கும் உங்கள் தலைவர்கள் கட்டாய இந்தியை ஒழிப்பதற்கு வேறு திட்டமாவது வைத்திருக்கிறார்களா—அப்படியானால் அதைஇப்போது சொல்லுவார்களா?

—பா. வேந்தன், தஞ்சை

ப : சொல்ல வேண்டிய சந்தர்ப்பம் வரும்போது வியாக்கியானம் என்ற முறையில் இல்லாமல் வெளிப்படையாகத் திட்டவட்டமாக அறிவிப்பார்கள். எனவே நீர் ஒன்றும் இப்போது அங்கலாய்க்க வேண்டாம்.

*

கே : அஞ்சா நெஞ்சன் என்பவரே உங்கள் கண்ணீர்த்துளி கட்சி திராவிடர் கழகத்திற்கு உட்பட்டதா இல்லையா, சரியாக பதில் சொல்லும்.

—கே. டி. எஸ். ஞானம், திருச்சி

ப : தோழரே, ஆரம்பப் பாடமே, உமக்குப் புரியவில்லையா—பரிதாபம்—பரிதாபம்! உங்கள் கேள்விக்கு பதில் வேண்டுமானால் திருச்சியிலுள்ள தி. மு. கழகக் கிளை நிர்வாகிகள் யாரிடமாவது கேளுங்கள்—தெளிவுபெறச் செய்வார்கள்.

*

பாண்டிச்சேரி

சட்டசபை தேர்தல் முடிவு

*

காங்கிரஸ்	... 20
மக்கள் முன்னணி	... 16
சுயேச்சை	... 3
முடிவு தெரிந்தது	39
மொத்த ஸ்தானங்கள்	39

கே : ஐயா, தமிழன் ஒன்றுபடமாட்டான், உருப்படமாட்டான் என்கிறேன். உங்கள் அபிப்ராயம் என்ன?

—டி. மோகனம், சைதை

ப : ஆமாம் — உண்மைதான்! உங்களைப்போல ஆருடம் கணிக்கும் வேலையில் மட்டும் ஈடுபட்டுள்ளவர்களின் போக்கு திருந்தும்வரை தமிழர்கள் ஒன்றுபடமாட்டார்கள்தான்.

*

கே : ஐயா, தி. மு. க. மாநிலமாநாடு ஜூன் கடைசியில் நடப்பதாயிருந்தது ஏன் இன்னும் நடக்கவில்லை!

—பி. பி. நாராயணசாமி, பி. கே. புதூர்

ப : ஜூன் மாதத்தின் இறுதியிலே கேட்க வேண்டிய கேள்வியை ஜூலை மாத இறுதியில் கேட்கின்றீரல்லவா — கேள்வி கேட்கவே உங்களுக்கு ஒரு மாத தவணை ஒத்திப்போட வேண்டியிருக்கிறது. எனவே மாநில மாநாடு நடைபெறும் தேதியை இரண்டொரு மாதங்களுக்கு ஒத்திப் போடுவதில் உங்களுக்குக் கோபம் இருக்காதல்லவா?

•

சாதிக்குச் சவக்குழி.

மதிப்பிற்குரிய இரண்டொரு நண்பர்களின் கூட்டு முயற்சியால். யாம் 1953 மார்ச்சு மாத வாக்கில் ஒரு மாதாந்திரம் ஆங்கிலக் கையெழுத்துச் சஞ்சிகையாகத்துவக்கினோம். அதற்கு 'நட்பு மன்றம்' 'Friends' Form' என்று நாமஞ்சூட்டி ஓட்டினோம். நான்கு மாதங்கள் நீண்டோடி நின்று விட்டது. நின்றதற்குச் சில பல காரணங்கள். அவை எதற்கு இங்கே?

அச்சஞ்சிகைக்கு தனிக்கட்டுரை யொன்று வரைந்தருளுமாறு "பஞ்சாப் செலவு" என்னுங் கட்டுரையில் (திராவிடன்—8—7—55) குறிப்பிடப் பட்ட பஞ்சாப் முதியவரைக் கேட்டோம். அவர் உடன் மனமுவந்து 'சாதிக்கட்டுப்பாட்டைத் தகர்த்தெறியுங்கள்! ஏன்?' (Annihilate Caste System! Why?) என்ற கட்டுரையை அனுப்பினார். அதனுடைய தமிழாக்கமே கீழே எழுதுவது:

ஒழியுங்கள் சாதியை!

ஒழியட்டும் சாதி! ஏன்? சாதிச் சனியனால் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம், தழைத்தோங்க முடியாது. பிறப்பால் உயர்வு, தாழ்வு, கற்பிக்கப்பட்டு, ஒற்றுமை சீர்குலைகிறது. மனிதனுக்குள் மனிதன் அடிமையாகிறான். கலப்பு மணத்தையும், சமபந்தி போஜனத்தையும் தடுத்து மக்களது ஒற்றுமையை வெட்டி விடுகிறது.

இந்தியா ஒரு தனி நாடாக இயங்கமுடியாமைக்குக் காரணமே, நாலாயிரத்திற்கும் மேம்பட்ட சாதிப் பிரிவுகள் தலை விரித்து ஆடினமையாலேதான்.

அன்னியர் படையெடுப்புக்குக் காரணமும் சாதி முறையே யொழியவேறென்ன? "ஆயிரமுண்டிங்கு சாதி — அன்னியர் புகலென்ன? நீதி?"—என்ற வேதாந்தம் எடுக்குமா?

சாதிக் கொடுமையால் பொருந்தாத் திருமணங்கள் பெருகி விபசாரம் வளர்கிறதல்லவா?

சாதிச் செருக்கால் பார்ப்பனன் உயர்த்தப்பட்டான். அகம் பாவத்தோடு வாழ்கிறான்.

க்ஷத்திரியன் மார்பு காட்டிப் போரிடுவான். மரணத்தையும் அணைத்திடுவான். ஆனால் ராஜதந்திரம் உரைப்பது அவன் பாலில்லை அந்த அறிவு வேற்றாரிடமாம்.

வைசியன் வியத்தகு வாணிபஞ் செய்வான். ஆனால் அவன் கடைந்தெடுத்தக் கோழையின் அவதாரமாகிறான்.

சூத்திரன் விலங்கினும் கடையனாக மதிக்கப் படுகிறான். மற்றச் சாதியினருக்கு பரம்பரை அடிமைத் தொழில் செய்பவனாகிறான்.

பஞ்சமன்மலமெடுக்குங்கையினாலேயே உணவருந்துபவனாகிறான்.

எனவே சாதி முறை மனிதனைச் சுதந்தர வீரனாகத் திகழுவதற்குத் தடை விதிக்கிறது. தீண்டாமைக்குக் காரணம் சாதி முறையேயல்லாது வேறென்ன? ஆகவே **ஒழியட்டும் சாதி! ஒழியுங்கள் சாதியை! ஒழிப்பது எப்படி?**

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், சாதி ஒழிப்புக் கருத்துக்கள் பாட புத்தகமாக உருவெடுக்க வேண்டும்.

பலதரப்பட்டச் சாதிகள் ஒன்று கலந்து திருமணஞ் செய்து கொள்ள வேண்டும்.

ஒன்று கூடி வேற்றுமை பாராட்டாது உணவருந்த வேண்டும்.

சாதி ஒழிப்புப் பிரசாரம் மூலை முடுக்குகளெல்லாம் நடந்த வண்ணம் இருக்க வேண்டும்.

பத்திரிக்கைகளில் பத்தி பத்தியாக, பக்கம் பக்கமாக சாதியை வெறுத்துக் கட்டுரைக் கொத்துகளைத் தீட்ட வேண்டும். சாதி ஒழியாத வரை நாம் ஓயவே கூடாது.

அரசாங்கச் சலுகைகள், மக்கள் ஆதரவு, அனைத்தும் சாதி ஒழிப்பாளர் பக்கமே இருக்க வேண்டும். அதோடு அரசாங்க நிலையங்களில் உள்ள ஏடுகளில் சாதி என்ற பகுதியே பறந்தோட வேண்டும்.

அப்போதுதான் சாதி ஒழியும்! தொலையும்!! மாண்டுபோம்!!!

எனவே சவக்குழி தோண்டுங்கள், சாதியை ஆழப்புதைக்க!

—"திருவேடம்."

தலைமைக் கழகம் : அறிக்கை—23/55

திராவிடக் கழகத்தின் ஆகஸ்டு போராட்டம்

*

"திராவிடக் கழகத்தினர் தாங்களே கூடி, தாங்களே திட்டம் தீட்டி, ஆகஸ்டு முதல் நாள் நடத்தப் போகும் கொடி கொளுத்தும் போராட்டம் பற்றி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை என்ன என்று அறிய பலர் ஆவலுறுகின்றனர்.

"இந்தி எதிர்ப்பு நோக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு முற்றிலும் உடன்பட்ட ஒன்று என்றாலும், கொடி கொளுத்தும் ஆகஸ்டு போராட்ட முறை திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கலந்து கொண்டு தீட்டப்பட்டதுமல்ல—திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உடன்பாடானதுமல்ல;

"எனவே, திராவிடக் கழகத்தின் ஆகஸ்டுப் போராட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் கலந்து கொள்ளாது;

"திராவிடக் கழகத்தின் ஆகஸ்டுப் போராட்டம் பற்றி நான், நண்பர்களோடு கலந்து பேசிய கருத்துக்கள் விளக்கமாகவும், தெளிவாகவும் 23—7—55 'திராவிடநாடு' இதழில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன."

இரா. நெடுஞ்செழியன்

பொதுச்செயலாளர், தி. மு. க.

தன்னைக் கசக்கயிருந்த இரும்புக் கரத்திலிருந்து புது மலர் தப்பியது. பாதகத்துக்குத் துணை புரிந்தவனே-பாவத்தை உணர்ந்தான். நீதிக்குக் கை தூக்கினன். சதியின் மூலகர்த்தாவுக்கும்-நீதியின் கரத்துக்கும் போர் துவங்கியது!

40

பனித்துளிகள் பாதை யெல்லாம் பதிந்து கிடந்தன, காதலன் கன்னத்தில் பதித்த காதல் ரேகையைக் காலையிலே வெட்கத்தோடு துடைக்கும் காதலியைப் போல. தன் மேனியோடு மேனியாக ஒட்டிக்கிடந்த பனித்துளிகளைப் புது மலர்கள் ஆடி ஆடித் துடைத்துக் கொண்டிருந்தன. அக்ரமக்காரனின் ஆதிக்கத்துக்கு ஆளான வனஜாவின் மலர்க் கரங்கள் செவ்வானத்தைப் போல சிவந்து கிடந்தன. கசங்கிய உடலோடும், அசந்துபோன இதயத்தோடும் பாதையோடு நடந்து போய்க்கொண்டிருந்தாள்,

நினைவுகள் நெஞ்சைக் குத்திக் கொண்டிருக்க...வீட்டின் கதவிலே கையை வைத்தாள் வனஜா கதவு திறந்ததும் கீழே விழுந்து கிடந்த—கடிதக்கட்டு தான் வனஜாவின் கண்களிலே முதன் முதலாகப்பட்டது. தாவியெடுத்தாள் அந்தக் கடிதக் கட்டை. தபால் முத்திரையில்லாத அந்தக் கடிதம் -என்ன புது வேதனையைத் தரப் போகிறதோவென்று எண்ணிக் கொண்டே கடிதக் கட்டைப் பிரித்தாள்.

"துரோகி!"... என்று ஆரம்பித்திருந்த அந்தக் கடிதத்தின் முதல் வரியைப் படித்ததுமே, தலை சுற்றத் துவங்கியது வனஜாவுக்கு, தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டே நாற்காலியிலே போய்ச் சாய்ந்தாள். மீண்டும் அந்தமூன்றெழுத்துக்களைப்பார்த்தாள். கொடுவாளான அந்த எழுத்துக்கள் அப்படியே தானிருந்தன.

அன்பேஎன்றஎந்தமூன்றெழுத்துக்களால் துவங்கி, காதல் பூஞ்சோலைக்கு வனஜாவை அழைத்துச் செல்லுமோ அதே எழுத்துக்கள்தான் துரோகி யென்ற மூன்றெழுத்துக்களைத் தாங்கி மின்னிக் கொண்டிருந்தது.

'கண்ணே!'...இப்படி அழைத்—ததுமே அந்த மூன்றெழுத்துக்களிலே.... வாழ்வின் தொல்லைகளெல்லாம் செத்துப்போய் இன்பம் பூத்து மலருவதாக அவள் கனவு கண்டிருக்கிறுள்.

கண்ணே என்ற பாகுமொழிக்கும்—துரோகி யென்ற சுடுசொல்லுக்கு மிடையே நடந்து முடிந்திருக்கிற எத்தனையோ வேதனைக் கதைகளைப் பற்றி வனஜாவுக்கே புரியும். சிரிப்பிலே துவங்கி—அழுகையிலே முடியும் வாழ்வுத் தொடர் கதைகளை நன்ருகப் படித்தவள்தான்.

செயலிலே அவள் துரோகியாகியிருந்தால் நினைவு அவ்வளவாகச் சுடாது. சூழ்நிலை அவளுக்கு முன்னே துரோகத் திரையைத் தொங்க விட்டது. அறுக்க முடியாத சிக்கல் அமைந்து விட்டதே யென்று தான் அதிர்ச்சியடைந்தாள், திருடனைத் 'திருடனே' என்று அழைத்தால் அவனது இதய அடித்தளத்திலிருந்து கோப அலைகள் எழும்பிக்குதிக்காது. நான் செய்வதே திருட்டுத் தொழில் தானே இதற்குப் பட்டம் வேறு யென்று உள்ளத்துக்குள்ளேயே முனகிக்கொள்வான். உண்மையிலேயே வேண்டு—மென்றே வனஜா துரோகம் புரிந்திருந்தால் எழுதிய சித்திரத்தை ரப்பரால் அழிக்கும் மாணவனைப் போல நினைவை அழித்து விட்டு மறந்திருப்பாள்.

யாரோ நடத்திய சூதுக்கு வனஜா பலியானது மட்டுமல்ல—துரோகி பட்டத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டியவளானுள்.

துரோகி யென்ற எழுத்துக்களைப் படித்த போது.....கண்ணீர்த்துளிகள்தான் கடிதத்திலே விழுந்தன. அந்த கண்ணீர்த்துளிகள் மூன்றெழுத்துக்களை அழித்துக்கொண்டிருந்தன, எழுத்துக்கள் அழிந்து விடும்—அழித்து விடலாம்....ஆனல், அதை உருவாக்கியவனின் உள்ளத்திலிருக்கும் கருத்தை யார் அழிப்பது—மாற்றித் திருத்துவது?

கடிதங்கள் புதுச் சூட்டைத் தரத்துவங்கின!

"சிரித்துப் பேசுவதால் எதையுமே மறைத்து விடலாமென்று நீ நம்பிக் கிடந்த முடிவை இப்போதாவது மாற்றிக்கொள். சாகசங்கள். சூழ்ச்சிகள் எப்போதுமே வெற்றி பெற்ற தில்லை. வேஷம் போடும் நாசகாரியே, உன் விஷப்பற்கள் என் மேனியிலே அழுத்துமுன் நான் விலகிக் கொண்டேன்,

"படித்த உன்னல் பாதகத்தையும் செய்ய முடியுமென்பதைக் காட்டி விட்டாய். சின்னஞ்சிறுர்களின் பிஞ்சு நெஞ்சிலே ஒழுக்கத்தைப் பதிய வைக்க வேண்டிய நீயே......பாவத்தின் பிரதிநிதியாகி விட்ட பிறகு—உன் போதனை எப்படித்தானிருக்குமோ?

அழகை மூலதனமாக வைத்து அழிவுப் பாதையில் கால் வைத்திருக்கும் குமரி! அழகு நிலையானதல்ல—'மானம்' வாழ்வுக்குப்பின்னரும் தொடரும். ஜாலத்தையே நம்பி யிருக்காதே. அது உன்னையே சவக்குழிக்கு இழுத்துச் சென்றுவிடும். நீ எனக்கு கிடைக்காவிட்டாலும்—ஊதாரிகளிடம் சிக்கியிருக்கிருய். அந்தத் துன்பக் குகைதான் உன் துயர் தீர்க்கும் இன்பக் கோட்டமென நீ நம்பியிருந்தால்...அந்த நம்பிக்கை வீழ்ச்சியின் மடியில்தான் உன்னைத் துயிலவைக்கும்.

சமுதாயத்தின் 'அபாய அறிவிப்புகள்' காலப் புயலால் சரிந்து விழுந்திருக்கின்றன. நீ மட்டும் நிலையான நினைவுச் சின்னமென எண்ணி உன் ஆசை வலையை விரித்துக் கொண்டிருக்கிருய். சூதுக்காரி! உன் நாசநாடகத்தை மலைச்சாரலிலே பார்த்தேன். இது போன்ற சிருங்கார காட்சிகள் உன் வாழ்விலே இனியும் தொடருமானல் மிருகத்துக்கும் கீழான நிலைக்குத்தான் போய்விடுவாய். நீ படித்தவள்! உனக்குப் புரியும் கிளியோபாட்ராவைப் 'பற்றி. சாம்ராஜ்யங்களை ஆட்டிப் படைத்த அந்த சாகசக்காரியால் கூட வாழ்வின் இடிகளைத் தடுத்துக் கொள்ள முடியவில்லையென்ருல்—சாதாரணமான உன்னல் தானு சரசத்தால்...புது இன்பம் கண்டு ஒரே நிலையில் நிலைத்து விட, முடியும். பார்வையை வேலாக்கி—சொல்லைத் தேனுக்கி ஏமாந்தவர்களை வலையிலே விழ வைப்பதற்கு திறமை தேவையில்லை. யார் யாரோ அந்த வலையை வீசுகிருர்கள். வலை வீசினுல் தான் வாழ்க்கை அலையிலே நீந்த முடியுமென்ற நிலையிலே யிருப்பவர்கள் அவர்கள். அந்தத் திருப்பத்துக்கா நீயும் ஓட வேண்டும். எந்தக் காரணத்தை முன்வைத்து நீ அப்படிச் செய்திருந்தாலும்... சமுதாயத்தின் முன்னே நீ ஒரு பயங்கரமான குற்றவாளியே தான். காலத்தின் தீர்ப்பு உனக்கும் கிடைக்காமல் போகாது!

மனித நெஞ்சுக்குள்ளே மிருகமுமிருக்கிறதென்பதைத் தெளிவாக்கிக்காட்டிய உன் நல்லெண்ணத்துக்கு என் நன்றி......

தப்பித்துக் கொண்ட சேகர்

கடிதம் முடிந்தது! மயங்கிய நிலையிலே மேசையிலே சாய்ந்து முகத்தைக் கரத்தால் மறைத்துக் கொண்டாள் வனஜா. விக்கி விக்கி அழுத குரல்தான் அந்த அறையிலே நிம்மதியாகக் கேட்டுக் கொண்டிருந்தது. அழுது சாகும் தன்னை அணைத்துத் தேற்றக் கூட ஆளில்லையே யென்று அவள் எண்ணியபோது வாய் விட்டேகதறிவிட்டாள் சோகமயமான கதையை சொல்லும்போது ரசித்துக் கேட்கும் சிறுவனைப் போல.......அழுதழுது அவள் கூறிய வேதனைக் கதையை அனுபவித்துக் கேட்டுக் கொண்டே காலம் ஓடிக் கொண்டிருந்தது!

வனஜா அறையிலே அடைப்பட்டுக் கிடந்த அதே நேரத்தில் ...ரத்தம் சொட்டும் கத்தியோடு குள்ள உருவத்தினன் வீதியிலே ஓடிக் கொண்டிருந்தான், பாதையிலே நடந்து வந்தவர்கள் அந்த வெறிக் காட்சியைக் கண்டு ஓரத்திலே பயந்து ஒதுங்கிக் கொண்டனர். குள்ளனே ஆவேசத்தோடு ஓடிக் கொண்டிருந்தான்.

(அடுத்த வாரம்)

"கிளர்ச்சிகள்" : பெரியாரின் கருத்து

பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் 'கிளர்ச்சிகள்' என்ற தலைப்பில் 13—5—53 'விடுதலை' இதழில் தி. மு. கழக ஜூலைப் போராட்டத்திற்கு முன் வெளியிட்டுள்ள கருத்துக்களில் சில வருமாறு:—

'சென்னை இராஜ்யத்தில் கிளர்ச்சிகள் மலிந்து விட்டன;

'கம்யூனிஸ்டுகளின் கிளர்ச்சிகள் பல நடக்கின்றன;

'எல்லைத் தகராறுகள் கிளர்ச்சிகள் வேறு நடக்கின்றன;

'சென்னையில் டிராம்வேதொழிலாளர்கள் கிளர்ச்சி ஒரு பக்கம் குமுறிக் கொண்டிருக்கிறது;

'இவை தவிர, கண்ணீர்த் துளிகள் ஒருபுறம் கிளர்ச்சி துவக்க சங்கநாதம் செய்து கொண்டு இருக்கிருர்கள்'

இன்னும் பல கிளர்ச்சிகள் தோன்றலாம் என்பதாகவும் தெரிய வருகிறது;

சாதாரணமாக, சர்க்கார் நேர்மையாக நடந்து கொண்டு வந்தால், இவற்றுள் பெரும்பாகம் கிளர்ச்சிகள் நடைபெற வேண்டிய அவசியமே இருக்காது.

'கண்ணீர்த்துளிகள் செய்யப் போகும் கிளர்ச்சி என்பது அற்ப விஷயம் என்று மக்கள் கருதுவதானுலும், தமிழ்நாட்டில் உள்ள ஊர்களுக்கும், முக்கிய தெருக்களுக்கும், பூங்காக்களுக்கும், வடநாட்டான் பெயர்கள்—அதிலும் சிலவற்றிற்கு வடநாட்டு முதலாளிகள் பெயர்கள் இடுவது, வழங்குவது என்ருல், இந்த நாடு மானமற்ற அடிமை ஆட்சி நாடு என்றுதான் சொல்லப்பட வேண்டும்;

'இந்தக் கிளர்ச்சிக்காரர்களுக்குள் ஒற்றுமை யில்லாததாலும் கிளர்ச்சிகள், தாங்கள் உயிருடன் இருப்பதை காட்டிக் கொள்வதற்காகவும், எங்கே ஒருவர் வெற்றி பெற்று விடுவாரோ என்று ஒருவர் மீது ஒருவர் பொருமைப்படுவதாலும், இவை நல்லவண்ணம் வெற்றி தருமா என்பது பற்றி கவலைப்படவேண்டியிருக்கிறது;

'கம்யூனிஸ்டுகள் தவிர்த்த மற்ற கிளர்ச்சிக்காரர்கள் ஒரு பொது மாநாடு ஏற்பாடு செய்து, கூடுமான அளவுக்கு அந்த மாநாடு முடிவுப்படி நடப்பதாக முடிவு செய்து கொண்டு, கட்டுப்பாடாக கிளர்ச்சி துவக்கினுல் வெற்றி பெரிதும் நிச்சயமேயாகும்; எப்படியாவது இக்கிளர்ச்சிகள் வெற்றிபெற்றே ஆகவேண்டும்;

'இதை, கிளர்ச்சிக்காரர்கள் கவனிப்பது நலம்; அல்லது, அவரவர்கள் இஷ்டப்படி நடப்பதும் குற்றமல்ல, உணர்ச்சியையும், உற்சாகத்தையும் பொறுத்தவிஷயங்களுக்குத் தம் கடமையைச் செய்கிருேம் என்ற அளவில் செய்ய வேண்டியதேயாகும்."

கற்பனைச் சித்திரம்

கற்புக்கு வேலி?

—அண்ணு அன்பன்

'பத்மா! அடி பத்மா!'

பத்மா கதவைத் திறக்கவில்லை. தாழ்வாரத்தில் நின்றபடி கணவனுல் தட்டப்படும் வாசற்கதவை கோபக் கனல் கக்கும் கண்களால் தணலாக்கி விடுவது போல பார்த்துக் கொண்டிருந்தாள். சனல் காட்டில் மூண்ட அனலாக எரிந்து கொண்டிருந்த அவள் இருதயத்தின் அடிதளத்திலிருந்து பீறிட்டுக் கிளம்பிய வெறுப்புணர்ச்சிக் கலந்த பெருமூச்சுக்கு மட்டும் எரிக்கும் சக்தியிருந்திருந்தால், அந்த வாசற் கதவையும் அதைத் தட்டிக் கொண்டிருக்கும் அவள் கணவனையும் சாம்பல் மேடாக்கி விட்டிருக்கும், அவ்வளவு கோபம் அதற்கு முன் அவளுக்கு கணவன் மீது ஏற்பட்டதில்லை.

பத்மா பத்மா அடி பத்மா...!

அவன் குரல் தோட்டானின் கூவலை நினைவூட்டும் விதத்தில் அந்த பதினென்றறை மணி ராத்திரி வேளையில் அகோரமாக உருவெடுத்து அந்தத் தெருவையே உலுக்கியது. ஆனுல் பத்மாவின் உள்ளம் மட்டும் குலுங்கவில்லை. அசையாமல் அப்படியே அங்கேயேதான் நின்று கொண்டிருந்தாள். தினந்தோறும் திருட்டுத்தனமாக விற்கும் தண்ணியை உள்ளுக்குள் போட்டுக் கொண்டு இரவு வேளையில் ஊர் அடங்கிய பிறகுதான் அவன் வீட்டிற்கு வருவான். மூடியிருக்கும் வாசற் கதவை தட்டுவான், அவள் பெயரைக் கூப்பிடுவான்—சீக்கிரத்தில் கதவு திறக்கப்படா விட்டால் ஓலமிட்டு அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களின் தூக்கத்தையும் தூள் தூளாக்கி விடுவான்.

அக்கம் பக்கத்தார் மட்டுமல்ல, அந்தத் தெருவிலுள்ள எல்லோருக்குமே வெல்லம் தின்னும் பொடிப் பயல்களிலிருந்து சுருட்டுப் பிடிக்கும் கிழட்டுப் பிண்டங்கள் வரை அவனைப் பற்றி அறிந்து வைத்திருந்தார்கள். அப்படியே அவன் மனைவியின் பெயரையும் தெரிந்து வைத்திருந்தார்கள். அவன் எழுப்பும் கூச்சலில் அவள் பெயரையும் கூட எழுப்பி அந்தத் தெருவுக்கே அவ்வளவு அமோகமாக அவளை விளம்பரப்படுத்தி வைத்திருந்தான் அவன்,

'மதுவிலக்கு சட்டத்தை அவன் பொருட்படுத்தவில்லை. எந்தக் குடிகாரன்தான் பொருட் படுத்துகிறுன்! சட்டமும் அவனை சும்மா விட்டுவைக்கவில்லை, இரண்டு மூன்று தடவை அவனைக் கண்டித்திருக்கிறது—அதுவும் அபராதம் விதிப்பதின் மூலமாக. பத்மா எவ்வளவோ அவனுக்கு சொல்லிப் பார்த்தாள், உபதேசியானுள், மதவாதியானுள், அதிகாரியானுள்—எந்த மிரட்டலுக்கும் உருட்டலுக்கும் அவன் அசையாமற் போகவே அவன் கால்களை பிடித்துக் கொண்டாள் — கண்ணீர் வடித்ததுதான் மிச்சம். காசெல்லாம் போதை நீராகக் கரைந்து கொண்டிருந்ததே தவிர அவன் மனம் மாறவில்லை;

'பத்மா பத்மா அடி என் சத்தியபாமா! கதவைத் திறவாய்...திறவாய் நீ திறவாய்...!' ஓலம் ஆலாபனையாக உருவெடுத்து காம்போதியில் ஊடுருவி உறங்குபவரின் தூக்கத்தைக் குடைந்தெடுத்தது, அவனை அன்றைக்கு கதவைத் திறக்காமல் அங்கேயே இரவெல்லாம் நிற்க வைப்பது என்ற எண்ணத்திலிருந்த பத்மாவால் அவன் குரலை மேலும் கேட்டு சகிக்க முடியவில்லை. கதவைத் திறந்தாள். அவன் சோர்ந்து போய் இருந்தான். சோகமாக இருந்தது அவன் நிலைமை! அன்று ஏகப்பட்ட குடிபோலிருக்கிறது. அவனுல் நிற்கவே முடியவில்லை. அவன் மீதிருந்த கோபம் தாபமாக மாறியது பத்மாவுக்கு. பெண் லட்சணம் போலும்! தடுமாறிக் கொண்டிருந்த அவனை சரியாக நிற்க வைத்து நிதானப்படுத்தினுள். அதே சமயத்தில் வெளியேயும் அவள் கவனிக்கத் தவறவில்லை.

எதிர் வீட்டிலே மூன்று பேர்கள்—முட்டாள்கள்! அந்த வேளையிலும் தூங்க முயலாமல் ஒருவருக்கொருவர் முணுமுணுத்துக் கொண்டிருந்தார்கள். அதன் பக்கத்து வீட்டுத் திண்ணையிலே ஒருவன் உட்கார்ந்து கொண்டு பக்கத்திலே படுத்துப் புரண்டு கொண்டிருந்த மற்ெருருவனிடம் ஏதோ சொல்லிவிட்டு காரித் துப்பினுன் கீழே, எலும்புருக்கி வியாதி போலிருக்கிறது அவனுக்கு; கூடவே இருமினுன். அந்த வீட்டை சற்றுத்தள்ளி நடுத்தெருவில் ஒரு வாலிபன் நின்று கொண்டிருந்தான். அவன் கண்கள் பத்மாவின் மீதுதான் பாய்ந்து கொண்டிருந்தன. இரவு நேரத்தில் மேய்ச்சலுக்காக அலையும் எருமை போலிருக்கிறது.

பத்மா பார்வையை கணவனின்மீது திருப்பினுள். அவன் இடுப்பில் ஓர்கரம் கொடுத்தணைத்து அவனை உள்ளுக்குள் நடத்திச் சென்று படுக்கை அறைக்குள் நுழைந்தாள் அதே சமயத்தில் நடுத்தெருவில் நின்று கொண்டிருந்த அந்த வாலிபன் சுற்று முற்றிலும் பார்த்து விட்டு பூனையைப் போல அந்த வீட்டிற்குள் நுழைந்து தாழ்வாரத்தின் ஓர் மூலையில் நின்று கொண்டான்!

ஏன் கதவை திறக்க இவ்வளவு நேரம்! ஏனடி மானே!' தேனே, ...என்று உளறிய கணவனிடத்தில் பத்மா ஒன்றும் பேசவில்லை! பேசினுல் அடி; உதை, வசவு எல்லாம் ஒன்ருக விழும் என்றும அவளுக்கு நன்ருகத் தெரியும். காலைப் பனிததுளிகள் சூரியனின் கதிரொளிபட்டு மின்னுவது போல, அந்த அறையில் எரிந்து கொண்டிருந்த அரிகேன் விளக்கின் சுடரொளிபட்டு அவள் கண்களில் துளிர்த்துக் கொண்டிருந்த கண்ணீர்த்துளிகள் மின்னிக் கொண்டிருந்தன. புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு கணவனை நிமிர்ந்துப் பார்த்தாள்; அவனும் அவளையே பார்த்துக் கொண்டிருத்தான், திடீரென்று உணர்ச்சிக்கு அடிமைப்பட்டவனைப் போல, அருகே நின்று கொண்டிருந்த அவளைத் தாவிப்பிடித்தான்; இழுத்தவன் அன்னியனல்ல கணவன்! ஆனுலும் அவள் பிரண்டு துள்ளி ஓடி நின்ருள்! அவளுக்கு அன்றைக்கு அவனைக்காணவே அச்சமாக இருந்தது அவனே கட்டிலிலிருந்து இறங்க முயற்சித்து கீழே வெட்டுண்ட மரம் போல சாய்ந்து விட்டான்! பத்மா அருகே வந்து அவன் உடலை தொட்டுப் பார்த்தாள்; உயிருக்கு ஆபத்தில்லை — உணர்வுதான் மங்கி விட்டிருந்தது ! பிணம் போல சாய்திருந்த அவனை தூக்கி கட்டிலின் மீது சரியாகப் படுக்கவைத்து போர்வையால் மூடினுள். அவள் அழவில்லை வாய் விட்டு அவள் மனம் அழுதது குரல் விட்டு, அந்தப் பாழாய்ப் போன மனம் தினந்தோறும் அழுது கொண்டு தானிருந்தது! அந்த அழும் மனதின் உணர்ச்சிக் குரல்தான் அவள் சோகக் கண்கள்! அந்தக் கண்கள் கணவனின் அழகைக் கண்டு ஒரு காலத்தில் இன்ப போதையில் மயங்கியதுண்டு, அந்தக் கண்கள் அவனின் குணத்தைக் கண்டு பெருமையில் களிப்புக் கூத்தாடியதுமுண்டு அந்தக் கண்கள்தான் இன்று அவனுடைய அவல நிலையைக் கண்டு கண்ணீர் சிந்துகின்றன — சிந்திக் கொண்டேதான் இருக்க வேண்டுமா! காலமெல்லாம் !

பெருமூச்சு விட்டவாறு கட்டிலுக்கு எதிரே இருந்த ஜன்னல் கதவுகளை மூடி விட்டு எரிந்து கொண்டிருந்த அரிகேன் விளக்கின் வெளிச்சத்தை சிறிதாக்கிய பத்மா, அறை கதவின் மீது பார்வையைச் செலுத்தினுள் — மூடுவதற்கு. ஆனுல் அவள் விழிகளோ மறுபடியும் மூடவில்லை அகல விரிந்துவிட்டன திடீரென்று ஏற்பட்ட அச்சத்தால், சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கூர்ந்து நோக்கினுள்......அந்த வாலிபன்!

'யாரது! அவள் அலறியே விட்டாள்! ஒன்றும் பேசாமல் உள்ளே நுழைந்தான் அந்த வாலிபன். கட்டான உடலமைப்பு அவனுக்கு; வசீகரமும் இருந்தது அவனிடத்தில், அச்சமோ கூச்சமோ இன்றி ஓர் பொருளை அடைவதற்காக நிச்சயம் செய்து கொண்டு வந்திருப்பவன் போலிருந்தது அவன் முகத்தோற்றம்! "யார் நீ!" பத்மா கேட்டாள் பதறிய படி. "தெரியவில்லையா" என்று சாகச சிரிப்போடு பத்மாவின் கேள்விக்கு எதிர் கேள்வி போட்டு அவள் இருதயத்தைக் கொத்தி இழுப்பது போல் அவளைப் பார்த்தான். அவன் வாயிலும் குடிநாற்றம் வீசிக் கொண்டிருந்தது! காட்டு மிருகத்தின் கோரத்தனம் அவன் கண்களில் வெறியாட்ட மாடிக் கொண்டிருந்தது!

கப்பியிருந்த அச்சத்தை உதறித் தள்ளிவிட்டு அர்த்த ராத்திரியில் அடுக்களைக்குள் நுழைந்து பால் செம்பை உருட்டும் திருட்டுப் பூனையைப்போல் தன் எதிரில் நின்ற அந்த போகப் பூனையை பத்மா தைரியத்தோடு பார்த்தாள். அவள் மனக் கடலில் ஓர் நினைவலை மோதிச் சிதறியது—அவன் வேறு யாருமில்லை. கடைத் தெருவில் பெண்களுக்கென்று அழகு சாதனம் விற்கும் கடைக்காரன். கடைத்தெருவுக்கு அவள் போகும் போதெல்லாம் அவன் அடிக்கடி அவள் கண்முன் தென்படுவான், வகைவகையான அலங்காரக் கோலங்களோடு. அவன் சிரிப்பான், இவள் கீழே காரி துப்புவாள்' அவ்வளவுதான் அவளுக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பு,

அந்தத் தொடர்பையே சாதகமாக்கிக் கொண்டு நடு இரவில் முன்பின் பேசியறியாத ஒரு இளம் பெண்ணிடம்—அதுவும் அவள் கணவன் தூங்கும் அறையிலேயே நுழைந்து அவளிடம் சாகசச் சிரிப்பை வீசும் அந்த வாலிபனின் நெஞ்சுத் துணிவு இலேசானதா என்ன! நினைத்துப் பார்த்த பத்மாவுக்கு மீண்டும் பழைய அச்சம் குடிபுகுந்துவிட்டது! கட்டிலில் தூங்கும் கணவனைப் பார்த்தாள், அவன் பிணம்போலக் கிடந்தான். குடிகார கணவன்! அதுவும் உணர்வு இழக்கும் வரையில் குடிக்கும் கள் வெறியன். அதனுல்தானே தைரியத்தோடு ஒரு காலிப்பயல் அவன் எதிரிலேயே அவளை கற்பழிக்க வந்திருக்கிறுன். பத்மாவுக்கு சீற்றமும் வேதனையும் பொங்கி யெழுந்தது. 'உன் புருஷனைப்பற்றிக் கவலைப்படாதே. நன்ருகக் குடித்துவிட்டிருக்கிறுன், நான் தான் வாங்கிக் கொடுத்தேன் நம்ம சௌகரியத்திற்காக என்ருன் அந்த வாலிபன்.

'அடபாவி போடாவெளியே' பத்மா கூச்சலை போட்டு விட்டாள்! அவன் பயந்துவிடவில்லை, அவளையும் அந்த அறையையும் ஒரு தடவை கூரிய கண்களால் கழுகுபோல நோட்டம் விட்டுவிட்டு விடுவிடுவென்று வாசற் கதவை நோக்கி நடந்தான்.

வெளியே பயங்கரமாக் காற்று வீசிக் கொண்டிருந்தது. மழை வருவதற்கு அறிகுறியாக இடியின் ஓசையும் நடைபாதை ஓரத்திலே தூங்கிக் கொண்டிருந்த பஞ்சைகள் மழையின் தாக்குதலினின்று தப்ப முன்கூட்டியே எழுந்து ஓடும் சத்தத்தையும் பத்மா கேட்டாள். அச்சத்தத்தின் இரும்புப்பிடியினின்று சிறிது விடுதலையடைய அவளுக்கு வெகுநேரம் பிடித்தது. அது வரையிலும் அவள் தன் பொற்கழுத்தில் சுற்றிக் கொண்டிருந்த தாலியை கையில் தாங்கியபடி உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்! அந்தத் தாலி அவள் கற்புக்கு வேலி! அந்தத் தாலி அவள் பெண்மைக்கு பொன்விளக்கு! அந்தத் தாலி அவள் இல்லறத்துக்கு வழிகாட்டி வழிகாட்டி என்ருல் சமுதாயத்தில் அவள் இப்படித்தான் வாழவேண்டுமென்று வகுத்துள்ள சட்ட திட்டங்களின் உபதேசப் பாடங்களை விளக்கித் காட்டும் ஆசான், தாலியில்தான் அவள் வாழ்வு அடங்கியிருந்தது. சமுதாயம் மதிப்பதும் அதனுல்தான். என்றெல்லாம் எண்ணிய பத்மா அந்தத் தாலியின் வலிமையால்தான்—அதன் மகிமையினுல்தான்—மானத்தைப் பறிக்கவந்த அந்த மூர்க்கன் மனம்மாறி வெளியே சென்றுவிட்டான்...என்று கருதிய பத்மா தாலியை கண்களில் ஒத்திக் கொண்டாள். ஆனுல் வாலிபனுல் ஏற்பட்ட அதிர்ச்சி முற்றிலும் அவளை விட்டு நீங்கவில்லை. வாசற் கதவை திறந்து விட்டுவிட்டே கணவனை மட்டும் உள்ளே அழைத்து வந்தது பெரிய

Tel: WIND. Phone: 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதராஸ்-1
பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப் பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8, கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
„ 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
„ கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
„ வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

வது! அந்தத் தவறினுல்தானே அந்தக் கயவன் நாயைப்போல உன்னே நுழைந்து விட்டான்!

பத்மா வாசற்கதவை மூட அறையை விட்டு வெளியே வந்தாள், வந்தவளுக்கு தனியாகச் சென்று கதவை மூட மட்டும் தைரியம் வரவில்லை அவளுக்கு அப்போதுதான் ஜானகியின் நினைவு வந்தது. அந்த சிறிய வீட்டில் இரண்டு கட்டுகள் முன் கட்டில் அவள் இருந்தாள், பின் கட்டில் நேற்றுதான் குடித்தனம் வந்தாள் ஒருவள். ஒண்டிக்காரி! அவள்தான் ஜானகி! கட்டழகி— ஆனுல் பாவம்—விதவை அவ்வளவு தான் அவளைப்பற்றி பத்மாவுககுத் தெரியும். பத்மா உடனே பின்கட்டிற்குச் சென்று ஜானகி ஜானகி என்று குரல் கொடுத்தாள் ஜானகி வெளியே வந்தாள்? தூங்காமல் இருப்பது போலிருந்தது அவள் தோற்றம். விதவையல்லவா! அதுவும் கட்டழகி! படுக்கையில் புரண்டபடி தன் இறந்த கால வாழ்க்கையைப்பற்றி நினைத்துக்கொண்டிருந்தாளோ என்னவோ. யார் கண்டார்கள்,

'என்ன பத்மா!' ஜானகி கேட்டாள்.

'கொஞ்சம் வாசற்கதவு வரைக்கும் வர்றியா?

ஜானகி பத்மாவை கூர்ந்து பார்த்தாள்' அவள் பயந்திருப்பது தெரிந்தது அவளுக்கு. ஒன்றும் பேசாமல் அவளோடுகூடச் சென்றுள். இருவரும் ஒன்ருகத்தான் வாசற்கதவை மூடி விட்டு வந்தார்கள். ஆனுல் தாழ்வாரத்தின் மூலேயில் சூழ்ந்திருந்த கடும் இருளில் வாலிபன் நின்று கொண்டிருப்பதை அவர்கள் இருவரும் பார்க்கவில்லே, பார்க்கவும் முடியாது. அந்த குறுகலான தாழ்வாரத்தில் சூழ்ந்திருந்த இருளில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க இயலாது.

'இப்படித்தான் உன் புருஷன் தினமும் ......? என்று ஜானகி கேட்ட கேள்விக்கு தலேயசைப்பதின் மூலம் விடையளித்தாள் பத்மா. அவளுக்கு வாலிபனேப்பற்றி ஜானகியிடம் சொல்ல முடியவில்லே. சொல்வதற்கும் அஞ்சினுள்; நேற்றுதான் குடித்தனம் வந்தாள்; ஒருவரின் குணம் ஒருவருக்குத் தெரியவில்லே; எப்படி மனம்விட்டுப் பேசுவது! 'என் அறைக்கு வாயேன் பத்மா! கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்கலாம்' என்று ஜானகி விடுத்த அழைப்பை ஏற்று அவளோடு அவள் அறைக்குள் நுழைந்தாள் பத்மா.

தாழ்வாரத்தில் பதுங்கிக் கொண்டிருந்த அந்த வாலிபன் மெல்ல மீண்டும் பத்மாவின் அறைக்குள் நுழைந்தான். கட்டிலில் சவம் போல விறைத்துக் கிடந்த அந்தக் குடிகாரனே தூக்கி கட்டிலின் அடியிலே படுக்க வைத்தான். பிறகு கட்டிலின் மீது அந்தக் குடிகாரன் படுத்துக் கொண்டிருந்த இடத்தில் போர்வையால் தன்னுடல் முழுவதையும் மூடிக்கொண்டு அவன்படுத்துக் கொண்டான்.

பத்மாவும் ஜானகியும் தங்களுடைய வாழ்க்கையைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்! இருவரும் வாழ்க்கையில் ஏமாற்றத்தை அனுபவிப்பவர்கள்தான்; ஆனுல் பத்மா குடிகாரன் மனைவி! ஜானகி இறந்தவன் மனைவி—விதவை! பத்மாவுக்கு தாலி உண்டு; அவளுக்கு அது இல்லே! மற்றபடி இருவரும் கண்ணீர் விடுபவர்கள்தான் பெருமூச்சு விடுபவர்கள்தான், இருண்ட வாழ்வில் உருண்டு கொண்டிருப்பவர்கள்தான்! எனக்குக் கலியாணமாகி ஆறுமாதம் தானிருக்கும். வயிற்றுப்பிழைப்புக்காக நான் அணிந்திருந்த மூவாயிரம் ரூபாய் பெறுமான முள்ள நகைகளே விற்று வெளியூருக்குச் சென்று ஏதாவது வியாபாரம் நடத்தலா மென்று எண்ணினுர் என் புருஷர். நான் எவ்வளவோ தடுத்தேன், முடியவில்லே அவர் நகைகளே எடுத்துக் கொண்டு போனவர்தான்: ஏதோ ஒரு விஷ ஜுரத்தில் செத்து விட்டார் என்று சாகும் போது அவரிடம் எதுவும் இல்லே யென்றும் ஓர் தந்தி வந்தது......தந்தியடித்தவன் அவர் சிநேகிதராம்...ஜானகி சொல்லி விட்டு அழுதாள். பத்மா ஆறுதல் கூறினுள் பிறகு பத்மா புலம்பினுள், ஜானகி தேற்றினுள்! இரு பெண்களும் மனம் விட்டுப் பேசினுர்கள், வாய் விட்டு அழுதார்கள்.

மணி ஒன்றடித்தது, பத்மா ஜானகியிடம் விடை பெற்று தன் அறைக்குள் நுழைந்தாள், அவள் நெஞ்சின் படபடப்பு அடங்கியிருந்தது மனதில் அழுத்திக்கொண்டிருந்த வேதனே பாரம் நீங்கியிருந்தது. எரிந்து கொண்டிருந்த விளக்கின் திரியை முழுவதும் இறக்கி விட்டு கட்டிலில் வந்து படுத்தாள், பக்கத்தில் படுத்துக் கொண்டிருப்பது அவள் கணவன் என்று கருதினுள். பத்மா—பேதைப் பெண். சில நிமிஷங்கள் செத்து மடிந்த பிறகு அந்த எத்தன் சித்து விளேயாட்டைத் தொடக்கி வைத்தான்! அவன் கரம் தாராளமாக அவள் உடலில் மேய்ந்தது. தடுக்கவில்லே பத்மா. எவ்வளவுதான் கணவன் மீது கோபம் இருந்தாலும் படுக்கையில் ஒத்துழைத்துத்தான் போக வேண்டும் அவள் கழுத்தில் பாம்பு போல் பிணைந்துத் தொங்கிக் கொண்டிருந்த தாலி போதித்த பாடம் இது! இல்லேயென்ருல் வாழ்க்கை விரசமாகி விடும்—அதே தாலியின் பயமுறுத்தல் இது. எனவே அந்தத் தாலியைக் கட்டியவன் என்ற எண்ணத்தாலேயே பத்மா வாலிபனின் சேஷ்டைகளேத் தடுக்கவில்லே.

காலேயில் பத்மா கண்விழித்து பக்கத்தில் கணவன் படுத்துக் கொண்டிருப்பதை பார்க்க விரும்பி திரும்பிப் பார்த்தாள்...இல்லே, படுத்துக் கொண்டிருந்த இடம் காலியாக இருந்தது, எங்கே போயிருப்பார் என்ற யோசனேயில் மூழ்கியபடி கட்டிலே விட்டு கீழே இறங்கிய பத்மா காலில் ஏதோ ஒன்று தட்டுப்படவே திடுக்கிட்டு குனிந்து பார்த்தாள், அவள் கணவன் கட்டிலடியில் இரவு படுத்துக் கொண்டிருந்த அதே கோலத்தில்! அவளுக்கு ஒன்றும் புரியவில்லே, அர்த்தமற்ற அச்சம் அவள் உள்ளத்தை முற்றுகை யிட்டது, அவன் உடலே தட்டிப் பார்த்தாள், அவன் உளறினுன். இன்னும் அந்தக் குடி மயக்கம் சரியாகத் தெளியவில்லே. அப்படி யென்ருல் தெளிவோடு இரவு நடந்த அந்தக் கேளிக்கை விளேயாட்டு!

அடி வயிற்றில் ஆயிரமாயிரம் அரவங்கள் கொத்தி விஷங்கக்குவதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது பத்மாவுக்கு. நெஞ்சைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கட்டிலின் மீது பார்வையைத் திருப்பினுள்—ஓர் கைக்குட்டை! நிச்சயமாக அது அவள் கணவனுடையதல்ல இல்லே யென்ருல்...! 'ஐயோ!' என்று அலறினுள் பத்மா! கழுத்திலிருந்தத் தாலியைக் கையில் பிடித்துக் கொண்டாள்—அவள் கற்புக்கரசி என்று உலகுக்கு எடுத்துக் கூறும் சாட்சி அந்தத் தாலி. அவள் கண்களில் கண்ணீர் காட்டாறு வேகத்தில் மோதியது! அறைக் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்; ஜானகி!

'பத்மா! இப்படி வா!'

ஒன்றும் பேசாமல், எங்கே அழைக்கிருள், ஏன் அழைக்கிருள் என்றும் கேட்காமல் — கேட்கவே நினேவில்லாமல் ஜானகியைப் பின் தொடர்ந்து நடந்தாள் பத்மா, ஜானகி தன் அறைக்குள் நுழைந்தாள், கட்டிலில் அந்த வாலிபன் —பத்மாவின் கற்பைச் சூறையாடிய சூழ்ச்சிக்காரன் — கண்மூடி படுத்துக் கொண்டிருந்தான்! அவனேக் கண்டதும் பத்மாவுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி... அதை அவள் தன் வாழ்க்கையில் அதுவரையிலும் அனுபவித்ததே இல்லே!

இவனே உனக்குத்தெரியுமா! ஜானகி கேட்டாள்.

தெரியாது...ம்...கடைக்காரன். பத்மா சொல்லவந்ததை சொல்ல முடியாமல் தவித்தாள், துடித்தாள்! அவள் கண்கள் இருண்டன, நிற்க முடியாமல் சுவற்றைப் பிடித்துக் கொண்டாள்.

விதவை ஜானகி அந்தத் தாலி பக்தை பத்மாவை சந்தேகக் கண்களோடு பார்த்தாள்.

இவன் உன் அறையிலிருந்து வெளி வந்ததை நான் பார்த்தேனே.

இவனு!

ஆமாம்! இவனேதான்! மணி ஒன்றிருக்கும்.

ஓவென்று அழுதுவிட்டாள் பத்மா, ஜானகிக்கு அவள் இவனுல் கற்பிழந்து விட்டாளென்று ஊகிக்க முடிந்தது. ஆனுல் அவள் ஜீவனே சம்மதமில்லாமல் ஏமாற்றி அவன் பறித்துவிட்டதை அவளால் ஊகிக்க முடியவில்லே. எப்படி முடியும்?

ஜானகி இந்தப் பாவி என்னே ஏமாற்றிவிட்டான். நான் இங்கே உன்னிடத்தில் பேசிக் கொண்டிருந்தபோது இவன் அறைக்குள் நுழைந்து அவர் படுத்துக் கொண்டிருந்த இடத்தில்... அவளால் மேலும் ஒன்றும் சொல்ல முடியவில்லே.

எவ்வளவு சுலபமாக அவளே ஏமாற்றியிருக்கிருன் அந்த சூதுக்காரன்! ஏமாற்றப்பட்டது என்ன முத்து மாலேயா வைர அட்டிகையா! கற்பு! கற்பு! கற்பு! எந்தக் கற்பைக் காப்பாற்ற ஒவ்வொரு பெண்ணும் உயிரைப் பணயம் வைப்பார்களோ அந்தக் கற்பை அவன் சுலபத்தில் ஏமாற்றி கொள்ளே யடித்திருக்கிருன்! அவன் மங்கையர் மாண்புக்கே மாசு! அவனேத் தொலேத்து விட்டுத்தான் மறுவேலே.

'ஜானகி ஒரு கத்தி கொடு! இவன் நெஞ்சைக் கிழித்தெறிகிறேன்! என்று வீறிட்டாள் பத்மா.

இல்லே! இவன் என்புருஷன்! விதவை ஜானகிதான் சொன்னுள்! பத்மா மிரண்டு விட்டாள், பித்தம் தனக்குப் பிடித்து விட்டதா! இல்லே அவளுக்குப் பிடித்துவிட்டதா என்று குழம்பினுள் அவள்.

ஆமாம் பத்மா! இவன் என் புருஷன். உயிரோடு இருக்கும்போதே என் தாலியைப் பறித்து விட்டான் பாவி! நேற்று ராத்திரி சொன்னேனே ஞாபகம் இருக்கிறதா, நகைகளே எடுத்துக் கொண்டு வெளியூருக்குச் சென்ற புருஷன் திரும்பவில்லே என்று...அந்தப் புருஷன்தான் இவன்! வஞ்சகன் செத்து விட்டதாக தந்தி அடித்திருக்கிருன், நான் நம்பினேன்; இந்தக் கொடும்பாவி கட்டின தாலியை அறுத்தது ஒருவிதத்தில் நல்லதுதான்! என் பெண் மனம் தேவைப்படவில்லே; ஆனுல் என் நகை தேவைப்பட்டிருக்கிறது இந்தப் பாதகனுக்கு. தூக்கம் வராமல் தாழ்வாரத்துக்கு காற்று வாங்க நான் வந்த போதுதான், இந்தப் பாவி உன் அறையிலிருந்து வெளி வந்தான்! என்னேக் கண்டவுடன் மிரண்டான் நான் கூட மிரண்டேன், செத்தவன் எப்படி உயிர் பிழைத்தானென்று பிறகு சூழ்ச்சி உணர்ந்தேன் கோபப் படாதவள் போல பேசி......இதோ படுக்கையில் படுக்க வைத்து விட்டேன்! கலங்காமல் அழாமல் சொன்னுள் ஜானகி, பத்மா அவளே வெறுப்போடு பார்த்தாள். ஆனுல் அவனே கண் திறக்காமலே இருந்தான்.

'பயப்படாதே பத்மா! உன்னேயும் என்னேயும் ஏமாற்றிய இந்த கயவன் தூங்குகிருன் மீளாத தூக்கத்தில் ஆழ்ந்து விட்டான். சயனட் தெரியுமா! உலகத்து சாமான்களேப் பாலிஷ் போடுவதற்கு உபயோகிக்கும் ஒரு வகை மருந்து சயனட் அந்த சயனட் கடும் விஷம். அதை பாலில் கலந்து கொடுத்து இவன் உயிரை பாலிஷ் செய்து விட்டேன், என்ருள் ஜானகி,பத்மா தன் தாலியைத் தொட்டுப் பார்த்தாள் கண்களில் நீர் திரண்டது, கற்புக்கு வேலியா அந்தத் தாலி ?

●

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற

வெண் சங்கு

சீயக்காய்த் தூள்

எங்கும் கிடைக்கும்

மணத்தில் மிகுந்த

செல்வம் ராணி

ஊதுபத்திகளே

உபயோகியுங்கள்



தயாரிப்பவர் :

வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி

3037—38 டபீர் குளம்ரோடு

தஞ்சாவூர்

சென்னிமலே

19—7—55 மாலே 7 மணிக்கு குமரன் சதுக்கத்தில் மும்முனைப்போராட்ட நினைவு நாள் பல்லடம் தோழர் பொன்னுசாமி தலேமையில் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் கி. மனேகரன் வி. சண்முகநாதன், ஈரோடு எஸ். அப்பாவு ஆகியோர் சிறந்ததோர் சொற்பொழிவாற்றினர்.

திருத்தம்

திராவிடன் 7—7—55-ம் வெளியீட்டில் வந்த செய்தியில் போரூரணி கூட்டத்தில் அறிஞர் அண்ணு அவர்களிடம் கிரமங்கலம் தி. மு. கழக சார்பில் ரூ 10-0-0 கொடுக்கப்பட்டது என்றும் நெடுவாசல் தி மு கழக சார்பில் 5-0-0 கொடுக்கப்பட்டதென்றும் வாசிக்க வேண்டுகிறேம்.

ஆ—ர்

பாலைவன ரோஜா!—மா. தங்கவேலர் தீட்டும் தொடர் நாடகம். விவரம் அடுத்த வாரம்.

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிட நாட்டுக் கல்வி வரலாறு

திராவிடப்பித்தன்

23

வங்க பொதுநலக் கல்விக் கமிட்டி அதனுடைய பிறப்புக் காலத்திலிருந்தே தலைவேதனைக்குள்ளாகி வந்தது. அரபு சமஸ்கிருத நூல்களை அவசியமின்றி உற்பத்தி செய்வதையும் சமஸ்கிருத அரபு மொழிகளில் கல்வி புகட்டுவதையும் ஒரு கோஷ்டியினர் விரும்பவில்லை. எதிர் கோஷ்டினயிரோ அரபு சமஸ்கிருத நூல்களை கணக்கு வழக்கின்றி அச்சடித்துக் குவிப்பதையும், பயனற்ற சமஸ்கித அரபு நூல்களை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்துக் குவிப்பதையும், அரபு சமஸ்கிருத மொழிகளில் கல்வி புகட்டப்பட்டு வருவதையுமே விரும்பினர். இப்படியாக வாதப் பிரதிவாதங்கள் முடிவு காண முடியாது வளர்ந்து வந்தன. சமஸ்கிருத அரபு மொழிக் கல்விப் பயிற்சியை ஆதரித்த கோஷ்டிக்கு **எச். டி. பிரின்சப்** என்பார் தலைமை வகித்தார், இவரும் ஆங்கிலேயர்தாம், வங்க சர்க்கார் கல்வி இலாகா செயலாளராக இருந்தவர். **டாக்டர் எச் எச். வில்சன்** போன்றவர்களும் இக்கோஷ்டியைச் சேர்ந்திருந்தனர். ஆங்கில மொழிக் கல்வியை ஆதரிக்கும் கோஷ்டிக்கோ நிலையான தலைவர் யாருமில்லை. ஆங்கிலக் கல்வி முறையை ஆதரித்து இக்கமிட்டிக்கு பலரிடமிருந்து கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. ஆங்கிலக் கல்லூரிகள் நிறுவும்படி வற்புறுத்தி பல விண்ணப்பங்கள் வந்த வண்ணமிருந்தன. மக்களின் இவ்வேண்டுகோள்களையும் கமிட்டியினா புறக்கணிக்க முடியவில்லை இச்சமயத்தில் கிழக்கிந்திய கம்பெனி டைரக்டர்களும் 'அரசாங்க உத்தியோகங்களை வகிப்பதற்கான வகையில் கல்விப் பயிற்சி கொடுத்து இந்தியர்களை தயார் செய்வதே நமது நோக்கமாக இருக்க வேண்டும்' எனத் தெரியப்படுத்தினர். இவர்களது இக்கருத்தை நிறைவேற்ற ஆங்கிலக் கல்வி முறையையன்றி வேறு முறைகளால் முடியாதிருந்தது. இப்படிப்பட்ட குழப்பமான காலத்தில்தான் **லார்டு வில்லியம் பென்டிங்க்** கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். பென்டிங்க் திடசித்தமுடையவர். ஆழ்ந்த அறிவும் சாமர்த்தியமும் உடையவர். இவர் ஆங்கிலக்

தர்ப்பையின் பயனைத் தெரிவது அறிவுடமையா?
மில்டனுடைய காவியத்தைத் தெரிவது அறிவுடமையா?

கல்வி முறைதான் இந்தியர்களின் அறிவு வளர்ச்சிக்கும நாட்டு முன்னேற்றத்திற்கும் துணையாக இருக்கும் என உறுதியான எண்ணங் கொண்டிருந்தார், இந்த எண்ணத்தை படிப்படியாகவும் நிறைவேற்றவும் திட்டமிட்டிருந்தார். இவர்தான் இராஜாராம்மோகன் ராய் உதவியுடன் கொடும் வழக்கமான சதியை ஒழித்தவர். இப்படிப்பட்ட உறுதியுடையவர் கல்வி விஷயத்தில் தகராறின்றி முடிவுகட்டி நல்லது செய்யத் துணிந்தார்,

1833-ம் ஆண்டில் கம்பெனியின் வாணிப உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டது. இப்புதிய சட்டத்தால் கவர்னர்ஜெனரலின் அதிகாரம் அதிகரிக்கப்பட்டது. மற்ற மாகாண கவர்னர்கள் கவர்னர் ஜெனரலின் நேரடி அதிகாரத்துக்கு உட்படுத்தப்பட்டனர், சாதிமத வித்தியாசங்களைக் கொண்டு எந்த இந்தியரும் அரசாங்க உத்தியோகத்திற்கு தடை செய்யப்படக் கூடாது. கிருத்துவ மிஷனரிகள் ஐரோப்பா நாடுகளிலிருந்து மதப் பிரசாரத்தை முன்னிட்டு இந்தியாவில் குடியேறலாம்,

கவர்னர் ஜெனரல் செயற்குழுவில் புதிய சட்டத்துறை அங்கத்தினர் ஒரு

ஆங்கிலக் கல்வியும் மெக்காலேயும்

வர் இடம் பெறுவார், நான்கு அங்கத்தினர் கொண்ட செயற்குழுவின் துணையுடன் கவர்னர் ஜெனரல் பிரிட்டிஷ் இந்தியா முழுவதையும் ஆட்சி செய்து வருவார். இவைதாம் 1833-ம் ஆண்டு புதிய பார்லிமெண்ட் சட்டத்தின் சாராம்சம். இச்சட்டத்தின்படி கவர்



லார்ட் மெக்காலே

னர் ஜெனரலின் நான்காவது செற்குழு அங்கத்தினராக லார்டு மெக்காலே 1834-ல் நியமிக்கப்பட்டார், இவர் சட்டத்துறை அங்கத்தினராக இருந்து வந்தார், இத்துடன் மேற்கூறிய வங்க கல்விக்கமிட்டியின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். சட்ட அங்கத்தினராயிருந்த லார்ட் மெக்காலே **'இந்திய கிரிமினல் சட்டத் தொகுப்பை'** எழுதி இந்தியாவில் நீதி பரிபாலனம் நன்முறையில் நடந்துவர ஏது செய்ததின் மூலம் புகழ் பெற்றார்.

லார்ட் மெக்காலேயின் முழுப்பெயர் **தாமஸ் பேபிங்டன் மெக்காலே** என்பதாகும். இவர் 1800-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25-ந் தேதி பிறந்தார். சாசாரி மெக்காலே என்பார் அவரது தந்தை, **செலினு மில்ஸ்** என்பார் அவரது தாய். **லண்டனை அடுத்த ராத்லி டெம்பிள்** என்ற சிற்றூரில் பிறந்தார்.

கவர்னர் ஜெனரலின் செயற்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்ட இவர் 1834-ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ந் தேதி சென்னை வந்து சேர்ந்தார். அச் சமயம் கவர்னர் ஜெனரல் லார்டு பென்டிங் நீலகிரியில் தங்கியிருந்தார். தன்னை நீலகிரியில்சந்திக்கும்படி மெக்காலேக்கு செய்தி அனுப்பியிருந்தார். அதன்படி மெக்காலே சென்னையை விட்டுப் புறப்பட்டு நீலகிரி சென்றார். ஜூன், ஜூலை ஆகஸ்ட் செப்டம்பர் மாதங்களில் நீலகிரியிலேயே இருந்தார். செப்டம்பர் 16-ந் தேதி சென்னைக்கு திரும்பி வந்து அன்றே கல்கத்தாவிற்குப் புறப்பட்டு விட்டார். சென்னையில் இருந்தபோதும் நீலகிரிக்குச் சென்று திரும்பிய பிரயாணங்களின் போதும் நீலகிரியில் தங்கி இருந்த போதும் தென்னிந்தியாவைப் பற்றிப் பல விஷயங்களைத் தெளிவாகத் தெரிந்து கொண்டார். மொழி, மக்கள் நாகரிகம் முதலியவைகளைப் பற்றியும், முக்கியமாக சாதி சழக்குகள் பற்றியும் தெரிந்து கொண்டார். திராவிட கிருஸ்துவர்களைப்பற்றி விரிவாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. கிருஸ்

விக்ரக ஆராதனை மகத்துவமுடையதா?
நியூட்டனுடைய விஞ்ஞான கருத்து மகத்துவமுடையதா?

துவ மதத்தினராக மாறிவிட்டவர்கள் இந்துக்களைப் போன்றே சாதி உயர்வு தாழ்வுகளை அனுசரித்து கிருஸ்துவ மதத்தைப் பாழுபடுத்தி வந்த உண்மையை தெரிந்துகொண்டார். குறிப்பாக தஞ்சை ஜில்லா மக்கள் சரித்திரம்மதநிலை ஆகியவைகளைப் பற்றியெல்லாம் தெரிந்து கொண்டார். நீலகிரி மலைசாதியினரைப் பற்றி தமது அனுபவங்கள் மூலம் நன்கு தெரிந்து கொண்டார். நீலகிரியினின்றும் புறப்படும் சமயம் மெக்காலே மலைசாதியினருடன் கைகலந்துசண்டையிடவும் நேரிட்டது. மைசூர் சரித்திரம் தென்னிந்திய முகம்மதிய மன்னர்களின் சரித்திரம் ஆகியவைகளை ஆங்காங்கு நேரில் சென்று கேட்டறிந்தார். இப்படிப்பட்ட விவரங்களை யெல்லாம் ஒன்றுவிடாது தமது கடிதங்களில் குறிப்பிட்டு எழுதியுள்ளார் மெக்காலே. நிற்க,

மேற்கூறிய வங்காள பொது நல கல்விக் கமிட்டியில் ஆங்கிலக் கல்விமுறை கோஷ்டியென்றும், அரபு சமஸ்கிருத கல்விமுறை கோஷ்டியென்றும் பிரிந்து நின்றவர்களின் கருத்து வேற்றுமை உச்சநிலையை அடைந்தது. கமிட்டியின் தலைவராக விருந்த லார்ட் மெக்காலேயோ இவர்களது வாதப் பிரதிவாதங்களில் கலந்து கொள்ள விரும்பவில்லை. கடைசியாக 1835 ஜனவரியில் இரு தரப்பினரும் தம்தம் வாதங்களையும் கருத்துக்களையும் கவர்னர் ஜெனரலின் முன்னர் சமர்ப்பித்து அவரது தீர்ப்பிற்குவிட்டு விட்டனர், கவர்னர் ஜெனரல் லார்ட் பென்டிங்க் அவர்களோ சட்ட மெம்பர் என்ற முறையில் லார்ட் மெக்காலேயிடம் இக்கல்விக் கமிட்டி கோஷ்டியினரின் வாதங்களை ஒப்படைத்து அவைகளை ஆராய்ந்து முடிவு தெரிவிக்கும்படிக் கேட்டுக் கொண்டார்.

இவ்விடம் முக்கியமாக கவனிக்க வேண்டியது இதுதான். இந்தியா முழுவதற்குமான ஒரு கல்வி முறையை தீட்டித் தருமாறு மெக்காலே கேட்டுக் கொள்ளப்படவில்லை. சட்ட நுணுக்கங்கள் தெரிந்தவர் என்ற முறையிலும், கவர்னர் ஜெனரலின் செயற்குழுவின் சட்ட அங்கத்தினர் என்ற முறையிலுமே வங்காள கல்விக் கமிட்டியின் இருசார்புகோஷ்டியினரின் வாதங்களின் மீது கருத்துத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்.

1813-ம் ஆண்டு பார்லிமெண்ட் புதுப்பித்த கம்பெனி சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாயை அதிக பயன்தரும் வகையில் எப்படி செலவிடலாம்; கீழ்த்திசை மொழி (அரபு–சமஸ்கிருத) இலக்கிய வளர்ச்சியைத் தவிர மற்றமொழி இலக்கிய வளர்ச்சிக்கும் இத்தொகையைப் பயன்படுத்தலாமா என்ற ஐயப்பாடுகளுக்கு சட்ட பூர்வமான கருத்தென்ன என்பவைகளைக் கூறும்படி லார்ட்மெக்காலே கேட்டுக் கொள்ளப்பட்டார். 1835-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் இரண்டாந் தேதி மெக்காலே தமது கருத்தைத் தெரிவித்தார்.

1813-ம் ஆண்டு புதுப்பிக்கப்பட்ட கம்பெனி சட்டத்தின் 43-வது பிரிவில் கண்டிருந்த **'இலக்கியம்' 'கற்றறிந்த இந்திய அறிஞர்கள்'** என்ற சொற்களுக்கான பொருள்களை முதலில் கூறலானார். **'இலக்கியம்'** என்ற சொல் அரபு சமஸ்கிருத இலக்கியங்களை மட்டுமே குறிப்பிட்டு நிற்கிறது என்று கூறுதலியலாது. ஆங்கில இலக்கியத்தையும் குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்வதற்கும் இடமுண்டு. அதேபோலவே **'கற்றறிந்த இந்திய அறிஞர்கள்'** என்ற சொற்றொடர் மில்டனுடைய காவியத்தையும், லாக்கியினுடைய தத்துவத்தையும், நியூட்டனுடைய விஞ்ஞான கண்டுபிடிப்புகளையும் படித்தறிந்துள்ள இந்திய அறிஞர்களையும் உள்ளடக்குமேயன்றி அவர்களை புறக்கணிக்கச் செய்யாது, எனக் கூறினர். மேலும் 'தர்ப்பைப் புல்லினுடைய பயன் என்ன, விக்ரக ஆராதனையின் மகத்துவம் என்ன என்றெல்லாம் சாங்கோபசாங்கமாகக் கூறும் இந்த இலக்கியங்களைப் படித்தவர்கள்தான் கற்றறிந்த இந்திய அறிஞர்கள் என்று கூறுவது நகைப்பிற்குரியதன்றோ!' என விளக்கம்கூறி சமஸ்கிருதவாதிகளின் ஞான சூன்யத்தை எள்ளி நகையாடினர்.

நவீன மேல்நாட்டு விஞ்ஞான அறிவை இந்திய மக்களிடையே வளரச் செய்யும் நோக்கம் ஆங்கில மொழியைப் பாடமொழியாகக் கொள்வதால மட்டுமே முடியும் என்னும் கருத்தை ஆழ்ந்து சிந்தித்துக் கூறினர் மெக்காலே. இவரது இக்கருத்து எழுத்திற்கு எழுத்துஉண்மையேயாகும் என்பதை யாவரும் ஒப்பியுள்ளனர்,

வடமொழி ஆதிக்க சவுண்டிகளுக்கு மெக்காலேயின் ஆப்பு

சமஸ்கிருத அரபுப் பள்ளிகளை தொடர்ந்து நடத்துவதால் யாதொரு பயனும் ஏற்படப் போவதில்லை என்னும் கருத்தைத் தெரிவித்து மெக்காலே கூறியுள்ளதாவது. 'கீழ்த்திசை மொழிக் கல்வி முறையை (அதாவது சமஸ்கிருத அரபு மொழிகளில் கல்வி புகட்டும் முறையை) ஆதரிக்கின்றவர்கள் கூறும் வேறொரு காரணமானது எல்லா நவீன கருத்துக்களுக்குமே எதிரிடையாக அமைந்துள்ளது. தற்போதைய கீழ்த்திசை மொழிக் கல்வி முறையை வளர்ப்பதையே மக்கள் தமது விருப்பமாகக் கொண்டுள்ளனர் என்றும், இது வரையில் சமஸ்கிருத அரபு கல்வி வளர்ச்சிக்கு செலவிடப்பட்டு வந்த தொகை வேறு வகையில் செலவு செய்ய முற்படுவது அக்கல்வி முறையை அறவே புறக்கணிப்பதாகவே கருதப்படும் என்றும் கருதுகின்றனர். இவர்கள் இப்படிக் கருதுவதற்குக் காரணம் என்ன என்பதை அறிவது சுலபமாக இல்லை.

ஒரு இடத்தை சுகவாசத்திற்குத் தக்க இடமாகக் கண்டு பிடிக்கின்றோம். ஆனால் பின்னர் அது சுகவாசத்திற்கு அருகதையற்றது எனக் காணப்பட்டால் அதே இடத்தில் வாசம் செய்ய விரும்புவோமா? ஒரு அணை கட்டுகின்றோம். இப்படிக் கட்டப்படும் அணையால் யாதொரு பயனும் ஏற்படாது எனும் உண்மை பின்னர் தெரிய வந்தால் அணை வேலையை நிறுத்திவிடாமல் பொதுமக்கள் அவமதிப்பார்களே என்பதற்காக தொடர்ந்து கட்ட முற்படுவோமா?' வாரன்ஹேஸ்டிங்ஸ் காலத்திற்கும் வார்ட் பெண்டிங் காலத்திற்கும் இடைப்பட்டக் காலத்திய கல்வி வளர்ச்சியை ஆராய்ந்து பார்த்து கூறப்பட்டதாகும் மெக்காலேயின் இக்கருத்து. 'காலத்தின் மாற்றத்தை மட்டுமல்ல, காலத்தின் முன்னேற்றத்தையும் அறிந்து நட' என்று அறிவுறுத்தியது மெக்காலேயின் இக்கருத்து.

கல்வி கற்பிப்பதற்கான மொழிப் பிரச்சினையைப் பற்றிக் கூறி மெக்காலே தமது கருத்தைத் தெரிவித்துள்ளதும் குறிப்பிட வேண்டியதாகும். 'ஒரு விஷயத்தில் மட்டும் எல்லா கட்சிகளும் ஒன்றுபட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்திய மக்களால் பேசப்படும் மொழிகள் யாவும் புதுமையான இலக்கிய அல்லது விஞ்ஞான வளப்பங்களைக் கொண்டிருக்கவில்லை. அவைகளின் வளமும் குறைவாயுள்ளது. இம்மொழிகளில் உயர்ந்த விஷயங்களை மொழி பெயர்ப்பதும் சுலபமல்ல. இம்மொழிகளெல்லாம் நல்ல வளர்ச்சியும் திண்மையும் அடைய வேண்டிய நிலையிலேயே உள்ளன. உயர்தரக் கல்வியை விரும்பிப் படிப்பவர்களின் தகுதியையும் திறமையையும் வளர்ப்பது உள்நாட்டு மொழிகளைத் தவிர வேறு ஏதேனும் ஒரு மொழியால்தான் முடியும்.' மெக்காலே உள்நாட்டு மொழிதான் முடியும். மெக்காலே உள்நாட்டு மொழிகளை இப்படி குறைவாக மதிப்பிட்டு விட்டாரே எனக் கோபப்படுதல் கூடாது. கல்விக் கமிட்டியில் இருந்த அங்கத்தினர்கள் யாவரும் இவரது கருத்தை ஒப்புக் கொண்டிருந்தனர், சமஸ்கிருத மொழியில் இந்துக்களுக்கும், அரபு மொழியில் முகம்மதியர்களுக்கும் கல்வி புகட்டுவதால் ஒரு பயனும் ஏற்படாது என்பதை தெளிவு படுத்தினர் மேற்கூறிய கருத்தின் மூலம் என அறிக.

இந்திய மொழிகளின் இலக்கிய விஞ்ஞான வளக்குறைவைப்பற்றி குறிப்பிட வந்த மெக்காலே 'ஒரு சிறு அலமாரி நிறைய உள்ள நல்ல ஐரோப்பிய இலக்கிய நூல்கள் இந்தியா முழுவதும் உள்ள இலக்கிய நூல்கட்கும் அரேபியா முழுவதும் உள்ள இலக்கிய நூல்கட்கும் சமமாகும் என்பதை சமஸ்கிருத அரபு மொழி ஆதரவாளர்களே ஒப்புக்கொண்டுள்ளார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார் மெக்காலேயின் இக்கருத்து அதிதீவிரமானது; மக்களின் மனதை வருத்தக் கூடியது; ஆனால் உண்மையும் அதுதானே!

ஆங்கில மொழியின் சிறப்பையும் அதன் பயனையும் குறித்து மெக்காலே கூறியுள்ளதும் கவனிக்க வேண்டியதாகும்.

'நமது சொந்த மொழியாகிய ஆங்கிலத்தைப்பற்றி மறுபடியும் எடுத்துக் கூறுவது அவசியமற்றதே. மேல்நாட்டு மொழிகள் எல்லாவற்றிலும் ஆங்கிலமே தலை சிறந்த மொழியாக நிற்கிறது. பண்டை கிரேக்க இலக்கியங்கட்குச் சமதையான நிலையில் வளப்பமும் எழிலும் நிறைந்துள்ளன நமது ஆங்கில இலக்கியங்கள்.' அதற்குச் சமதையான இலக்கியங்கள் உலகிலேயே கிடையா, அதைவிட சிறந்தவைகளும் கிடையா; வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் துள்ளியமாக விளக்கக் கூடிய சக்தியையும், விஞ்ஞான நுணுக்கங்களை சிறந்த வழியில் விளக்கிக் கூறும் ஆற்றலையும், மனித அறிவின் நுண்மையை சித்தரித்துக் கூறும் அழகையும் ஆங்கில மொழியில் மட்டுமே காண முடியும், தலைமுறை தலைமுறையாக கண்டு பிடிக்கப்பட்டு வழக்காற்றில் உள்ள பல நாட்டு சிறந்த கலைகளையும் மிக எளிதாகப் புரிந்து கொள்ளவும் விளக்கிக் கூறவும் கூடிய சாதனங்களையும் சக்தியையும் ஆங்கில மொழி தன்னகத்தே கொண்டுள்ளது. இம்மொழியில் உள்ள இலக்கியங்கள் யாவும் உலகச் சிறப்பு வாய்ந்தனவைகளாகும். இந்தியாவில் ஆங்கிலம் அரச பரம்பரையினரால் பேசப்பட்டு வரும் மொழியாக இருந்து வருகிறது. அரசாங்க அலுவல்களில் உள்ள உயர் சாதியார்களாலும் பேசப்படும் மொழியாக இருந்து வருகிறது. கீழுலகம் முழுவதற்கும் ஆங்கிலமே வாணிப மொழியாக வரக்கூடிய சூழ்நிலை நிலவியுள்ளது. இவ்வாறு கூறப்பட்டுள்ள மெக்காலேயின் கூற்றுக்களை மறுத்துக் கூறுவது எதிர்தரப்பினரால் முடியாத காரியமாகவே இருந்தது.

ஆங்கிலத்தை இந்தியர்கள் வெறுக்கிறார்கள் என்ற வாதத்தை உடைத்தெறிந்து மெக்காலே பதிலிறுத்துள்ளது நமது கவனத்தை ஈர்ப்பதாகும், 'சமஸ்கிருத அரபு மொழிகள் பயிலும் மாணவர்கட்கு நாம் பணம் கொடுத்து கல்வி பயிற்றுவிக்க வேண்டியுள்ளது. ஆனால் ஆங்கிலம் பயிலும் மாணவர்களோ நமக்கு பணம் கொடுத்து கல்வி கற்க முன்வருகின்றனர். தம்முடைய சொந்த மொழிகள் உயர்ந்தவை சிறந்தவை என்று ஒவ்வொருவரும் கூறிக் கொள்ளலாம், அப்படி சிறப்பாகவர்ணிக்கப்படும் நாட்டு மொழிகளை கற்பதற்கு நாம் பணம் கொடுத்தாலொழிய எந்த உள்நாட்டு மாணவரும் முன்வருவதில்லை. இந்நாட்டில் நிலவிவரும் இவ்வுண்மையை நடுநிலைமையாளர் எவரும் மறுத்துக் கூறுதலியலாது.'

'கல்விக் கமிட்டியினர் சமஸ்கிருத அரபு புத்தகங்களை அச்சியற்றுவதில் ஒரு லட்ச ரூபாயையும் செலவு செய்வது நியாயம் என நினைத்துள்ளனர். ஆனால் இந்த சமஸ்கிருத அரபு புத்தகங்களை வாங்குவாரோ யாருமில்லை, எப்போதோ ஆண்டிற்கு ஒரு புத்தகம் விலையாகிறது. இருபத்தி மூவாயிரம் புத்தகங்கள் இப்படி அச்சடிக்கப்பட்டு கல்விக் கமிடடியினரின் அறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளன, இப்புத்தகங்கள் யாவும் தூங்கிக் கொண்டிருக்கும் ஒரு இடமாகவே உள்ளது இக்கமிட்டியாரின் அலுவலகம் என்று கூறினும் தவறில்லை. இப்புத்தகங்களை விற்பனை செய்ய கல்விக் கமிட்டியினர் முயலுகின்றனர், ஆனால் அச்சடித்துக் குவிக்கும் அதே வேகத்தில் இவைகளை விற்பனை செய்வது முடியாததாயுள்ளது. இவ்வுண்மைகள் யாவும் கமிட்டியினருக்கு தெரிந்தே யுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் சுமார் இருபத்தி மூவாயிரம் ரூபாய் செலவிட்டு மேலும் மேலும் குப்பைக் கூளங்களை சேர்த்த வண்ணமே இருக்கின்றனர். முன்னமே போதிய அளவுக்கு இக்குப்பைகள் சேர்ந்துள்ளன. சென்ற மூன்றாண்டுகளில் அறுபதாயிரம் ரூபாய் இப்படியாக பாழ் படுத்தப் பட்டுள்ளது, இந்த மூன்றாண்டு காலத்தில் விற்பனை ஆகியுள்ள சமஸ்கிருத அரபு புத்தகங்களின் தொகை ஆயிரம் ரூபாய்தான். இதே காலத்தில் பள்ளிக்கூடப் புத்தகக் கமிட்டியினர் ஒவ்வொரு ஆண்டிலும் எண்ணாயிரம் புத்தகங்கள் வீதம் விற்றுள்ளனர். இவ்விற்பனை அவர்களது செலவிற்கும்போக இருபது சதவிகிதம் லாபத்தையும் கொடுத்துள்ளது'

மெக்காலேயின் இவ்வுண்மை வாதங்களை எதிர்தரப்பினர் வாய்திறவாமல் ஒப்பும்படியாகிவிட்டது. உண்மையை உண்மையாகவே ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழி?

கழுதையைத் தொட்டால் தீட்டு என அறிவது அறிவுடமையா ?
லாக்கியினுடைய தத்துவத்தை அறிவது அறிவுடமையா ?

எதிர் தரப்பினர் கூறிய வாதங்களில் மற்றொன்று வருமாறு, அரபும் சமஸ்கிருதமும் நாட்டு மக்களின் மத சட்டதிட்டங்களையும் பழக்கவழக்கங்களையும் விளக்கிக்கூறும் மொழிகளாக கருதப்படவேண்டும். அந்த அளவுக்கு அவைகள் மதிக்கப்பட்டு மக்களால் பயின்று வரப்படவேண்டும், இது எதிர் தரப்பினரின் வாதங்களில் ஒன்று. இவ்வாதத்தை மெக்காலே எப்படி எதிர்த்துக் கூறுகின்றார் பாருங்கள்,

'பல கோடிக்கணக்கான மக்களின் புனிதமான நூல்கள் யாவும் சமஸ்கிருத அரபு மொழிகளில்தான் எழுதப்பட்டுள்ளன, இந்த காரணத்திற்காகவாவது அம்மொழிகளை நாம் ஆதரித்து போதனு மொழிகளாகச் செய்ய வேண்டும் எனச் சொல்லப்படுகின்றது. இந்தியாவில் ஏற்பட்டுள்ள பிரிட்டிஷ் சர்க்கார் எல்லா மதவிஷயங்களிலும் நடுநிலைமை வகித்து பாரபட்சம் அற்ற நிலையில் இயங்க வேண்டும். இதுதான் ஆட்சியினரின் முடிந்த கருத்தாகும். சமஸ்கிருத அரபு மொழி இலக்கியங்கள் யாவும் குறைந்த மதிப்புள்ளவைகளே என்பதை யாரும் ஒப்புக் கொள்கின்றனர். இவ்விலக்கியங்கள் சில முக்கிய விஷயங்களின் மீது சில குற்றங் குறைகளை திருப்பித் திருப்பிக் கூறி விளக்குகின்றன. இவ்விளக்கங்களை மறுபடியும் மறுபடியும் கூறும் அரபு சமஸ்கிருத இலக்கியங்களைப் பயிலுவதை ஆதரிப்பதானது காரண காரியங்களுக்கு ஒத்ததாக இல்லை. அவைகளை கற்பிப்பதால் நாம் தப்பும் தவறும் உள்ள சரித்திரங்களையும் கற்பிப்பதாகும், தப்பும் தவறும் உள்ள மருத்துவக் கல்வியை கற்பிப்பதாகும். தப்பும் தவறும் உள்ள வானசாஸ்திரத்தை கற்பிப்பதாகும். தப்பும் தவறும் உள்ள சட்டதிட்டங்களை கற்பிப்பதாகும். ஏன் இவைகளை தப்பும் தவறும் உள்ளவைகள் எனக் கூறுகிறேனென்றால் இவைகள் யாவும் தப்பும் தவறும் உடைய ஒரு மதத்துடன் இணைந்துள்ளதால்தான். ஒரு கழுதையை தொட்டதால் ஏற்பட்ட தீட்டை எப்படிப் போக்கிக் கொள்வது என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவும், ஒரு ஆட்டைக் கொன்றதால் ஏற்பட்ட பாபத்தை போக்கிக் கொள்வதற்கும் எந்தவேத சுலோகத்தை ஜெபிக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவும் அரசாங்க நிதியிலிருந்து செலவு செய்வது அறிவுக்கு பொறுத்தமுள்ளதாக இருக்கின்றதா!'

இப்படியாக ஒவ்வொரு விஷயத்தையும் அலசிப் பார்த்து அந்தந்த விஷயத்திற்கும் தக்க பதிலிறுத்தி தனது கருத்தைத் தெரிவித்தார் லார்ட் மெக்காலே

உள்நாட்டு மொழிகளில் கல்விப் பயிற்சி நடைபெற வேண்டும் என்று வாதம் செய்தோர் அரபு சமஸ்கிருத மொழிகளின் கல்வி வளர்ச்சிக்கே வாதமிட்டனர். அவர்கள் வாதமெல்லாம் உயர்தரக் கல்விப் பயிற்சிக்கு அரபும் சமஸ்கிருதமும் பயன் படுத்தப்பட வேண்டும் என்பதுதான், அவர்களது கருத்து அந்தந்தப் பகுதி தாய்மொழிகளின் கல்வி வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. வங்க பொதுக்கல்விக் கமிட்டியில் இருந்த அங்கத்தினர்கள் வங்கம் டெல்லி ஆகிய மாகாணங்களை மட்டுமே தெரிந்தவர்கள். வட இந்திய ஆரிய முகம்மதிய மக்களை மட்டுமே தெரிந்தவர்கள், ஆரிய முகம்மதியர்களின் மொழிகளான சமஸ்கிருத அரபு மொழிகளை மட்டுமே தெரிந்தவர்கள். வடநாட்டின் உயர்தர சாதியினரை மட்டுமே தெரிந்தவர்கள். வங்கம் போன்ற உள்நாட்டு மொழிகளின் அபிவிருத்தியில் நாட்டமில்லாதவர்கள் வங்கம் முதலிய உள்நாட்டு மொழி இலக்கிய வளர்ச்சியில் அக்கரை இல்லாதவர்கள், ஆனால் அவர்கள் கூறிக் கொண்டதோ யாவற்றையும் அறிந்தவர்கள் போல கூறிக் கொண்டனர், அவர்கள் உள்நாட்டு மொழிகளுக்காக பாடுபட்டது போலவும் அதை மெக்காலே மறுத்து விட்டார் என்பது போலவும் திரித்துப் பேசுவது உண்மைக்குப் புறம்பானதாகும். சமஸ்கிருத அரபு மொழிப் பைத்தியங்களுக்கு தகுந்த மருந்து கொடுத்து தெளிய வைத்தார் மெக்காலே, இதுதான் உண்மை.

ஆனால் இப்போது நடப்பதென்ன! மெக்காலேயினால் தடைப்பட்டிருந்த சமஸ்கிருதம் சுதந்திரபாரதத்தில்உயர்ச்சிப் பெற்றுள்ளது. அதன் குணம் மணம் யாவற்றையும் உடைய தேவநாகிரி லிபி கொண்ட இந்தி ஒவ்வொருவர் மீதும் திணிக்கப் படுகின்றது. இப்போது ஆங்கில மொழி ஆதிபத்தியம் கண்டிக்கப் படுவதுபோல இந்தி மொழி ஆதிபத்தியம் கண்டிக்கப்பட வேண்டியதுதான் நீதியும் நேர்மையுமாகும், இந்திய அரசியல் திட்டத்தின் சட்டப் பிரிவைக் காட்டி இந்தி மொழி ஆதிக்கத்திற்கு வழி கோலுவது யானை தன் தலைமீதே மண்ணை வாரி போட்டுக் கொள்ளும் செயலாகும்என்பதை இந்தி வெறியர்கள் உணர்தல் வேண்டும்!

—தொடரும்

மறுமலர்ச்சி ஏடுகள்

'அறிவொளி'
ஆசிரியர் : பால்வண்ணன்
(திராவிடர் முற்போக்கு வார இதழ்)
விலை அணா 2 ஆண்டு சந்தா ரூ. 6.

'கண்மணி'
ஆசிரியர் : பூவண்ணன்
(சிறுவர் சிறுமியரின் வார இதழ்)
விலை அணா 2 ஆண்டு சந்தா ரூ. 6.

எல்லா ஊர்களிலும் முன்பணம் கட்டும் ஏஜெண்டுகள் தேவை.

விவரங்களுக்கு :

அறிவொளி, கண்மணி காரியாலயம்
38, சாமிபண்டாரம் தெரு, சென்னை-2

வ. ஆ. மாவட்ட தி. மு. கழக செயற்குழு கூட்ட விவரங்கள்.

●

24—7—55 திருவண்ணாமலை சாதுக்கள் சத்திரத்தில் வ. ஆ. மா. தி. மு. க. செயற்குழு கூட்டம் செயலாளர் முல்லை சத்தி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது, மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்து 34 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். 16 உறுப்பினர்கள் கடிதமூலம் ஒப்புதல் அளித்திருந்தனர். கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்.

இதுவரையில் பொதுச்செயலாளராக பணியாற்றிய அறிஞர் அண்ணா அவர்களுக்கு இக்கூட்டம் நன்றி செலுத்துகிறது.

பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை இக்குழு ஆதரித்து வரவேற்கிறது.

துணைச் செயலாளராக நியமிக்கப்பட்ட தோழர். N. V. நடராசன் அவர்களை வரவேற்கிறது.

வ. ஆ. மா. தி. மு. க. சார்பில் பொதுச்செயலாளருக்கு அளித்த வரவேற்பை இக்குழு ஏற்றுக்கொள்ளுகிறது.

இது வரையில் மாவட்ட சார்பில் நடந்த செலவினங்களை இக்குழு ஏற்றுக்கொள்ளுகிறது.

அறிஞர் அண்ணா அவர்களை மாவட்ட சுற்று பயணத்திற்கு அழைத்து நிதி அளிக்க விரும்புகின்ற நகர கிளைகள் ரூ 200 மற்ற கழகங்கள் ரூ. 100 மாநில மாநாட்டு நிதி அளிக்க வேண்டுமென்றும் மற்ற பேரூர் கழகங்கள் ரூ 50 சிற்றூர் கழகங்கள் 20 அளிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

மாவட்ட உறுப்பினர்கள் ஆண்டு சந்தா ரூ. 3 ஆக தீர்மானிக்கப்பட்டது.

செயலாளர் நன்றி செலுத்திய பின் கூட்டம் மாலை 4-30-மணிக்கு முடிவுற்றது. திருவண்ணாமலை தி. மு. க சார்பில் உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டது.

அன்று மாலை 6-மணிக்கு திருவண்ணாமலை அடுத்த கிழ்ணாத்தூர் தி. மு. க. சார்பில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது, மாவட்ட செயலாளர் முல்லைசத்தி தலைமைவகித்தார். தோழர்கள் C. P. சிற்றரசு ப. உ. சண்முகம், கருத்தோவியன், போளூர் சுப்பிரமணியம், திருவண்ணாமலை சுப்பிரமணியம் வேலூர் திராவிடமணி சொற்பொழிவாற்றினர். இரவு 10-மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

வ. மா. கிளைக் கழக செயலாளர்களுக்கு

மாநில மாநாட்டு நிதிக்கு சிற்றூர் கிளை கழகங்கள் ரூ. 20 பேரூர் கழகங்கள் ரூ. 50 நகர கழகங்கள் ரூ 100 அளிக்க வேண்டும் மென்றும், அறிஞர் அண்ணா அவர்களை அழைக்க விரும்புகின்ற நகர் கழகங்கள் ரூ. 200 மற்ற கழகங்கள் ரூ. 100 அளிக்க வேண்டுமென்றும் திருவண்ணாமலையில் கூடிய வ. ஆ. மா. தி. மு. கழகம் தீர்மானித்துள்ளது. அறிஞர் அண்ணா அவர்களை அழைக்க விரும்புகின்ற கழகங்கள் 5—8—55-க்குள் செயலாளர் முகவரிக்கு தகவல் அளிக்க வேண்டுகிறேன்; உடனடியாக செயலாளர்கள் நிதிவசூலில் ஈடுபட்டு நமது மாவட்ட கோட்டாவை பூர்த்தி செய்யுமாறும் வேண்டுகிறேன். நிதி வசூலை செயலாளர் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அன்பன், முல்லை சத்தி.

பம்பாய் நான்குனேரி வட்டார ஆதி திராவிட சங்கம்

பம்பாய் தாராவியில் 19—7—55ல் நான்குனேரி வட்டார ஆதி திராவிட சங்கத்தின் 3வது ஆண்டு முதல் நிர்வாக குழுக் கூட்டம் சங்க தலைவர் உயர்திரு எம். ஜே. ராஜமணி அவர்கள் தலைமையில் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது செயலாளர் அவர்களால் கடந்த கூட்ட நிகழ்ச்சி வாசிக்கப்பட்டன. 13 முக்கிய பிரச்னைகளை நிர்வாக குழுவில் கொண்டுவரப்பட்டது. 11 பிரச்னைகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. திரு எம். ஏ. சண்முகம், வி எஸ். கணபதி வி. எஸ். முத்தையா ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின் செயலாளர் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிது கலைந்தது.

திருவள்ளுவர் கலா மன்றம் பம்பாய்

திருவள்ளுவர் கலாமன்ற உறுப்பினர் கூட்டம் 23—7—55 இரவு 7 மணிக்கு தாராவி ரகீம் சேட்சால் பின்புறம் அமைக்கப்பட்டுள்ள பந்தலில் தோழர் வி. எ. ஆறுமுகப் பெருமாள் தலைமையில் நடைபெற்றது. கடந்த கூட்ட நிகழ்ச்சிகள் கடிதப் போக்குவரத்துகள் செயலாளர் உ. அ செல்லையா அவர்களால் வாசித்து ஒப்புக்கொள்ளப்பட்டது. கொலாபா 'கத்தோலிக்க நன்நடத்தை' சங்கத்தின் வளர்ச்சிக்காக பலிபீடம் நோக்கி நாடகத்தை நவம்பர் திங்களில் நடத்திக் கொடுப்பதென முடிவு செய்யப்பட்டது. திருவள்ளுவர் நினைவுநாளை ஜூலை 31-ல் கொண்டாடுவதெனவும் தலைவராக பாவலர் பாலையாவும் வள்ளுவர் படத்திறப்பாளராக எஸ், வள்ளிநாயகம் அவர்களையும் பேச்சாளர்களாக நசிவன் பாண்டியன், நெல்லை இரா. இளம்வழுதி ஆகியோரை தேர்ந்தெடுக்கப்பட்டது.

மன்ற அலுவலக நிதிக்காக பொதுமக்களிடம் நனகொடை வசூல் செய்வதெனவும் முடிவெடுக்கப்பட்டு மற்றும் சில முக்கிய பிரச்னைகள் பேசப்பட்டு கூட்டம் இரவு 10 மணியளவில் செயலாளர் நன்றி நவில முடிவுற்றது.

மாயவரம்

மும்முனைப்போர் நினைவு நாளைக் கொண்டாடு முகத்தான் 15—7—55 வெள்ளி மாலை 4மணிக்கு தோழர் மா. கி. ராமசாமி தலைமையில் மாயூரம் முசாபரி பங்களாவிலிருந்து ஓர் மாபெரும் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகளின் வழியாக வள்ளியம்மை படிப்பகத்தை வந்தடைந்தது. தோழர்கள் இரா. ஜோசப், கே. எஸ். சவுந்தரராசன், என். கிட்டப்பா ஆகியோர் போராட்ட நினைவு குறித்து சொற்பொழிவாற்றினர்.

கைத்தறி ஆடையையே அணியுங்கள்

முதல் பக்கத் தொடர்ச்சி

யும் வகையில் வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்த்து ஆந்திரம். கேரளம் ஆகிய பகுதிகளில் சில நிகழ்ச்சிகள் நடைபெற்றிருப்பதை அரசியல் யூகம் படைத்தோர் அறிவர். எனினும் தலைகொடுக்கும் பிரகஸ்பதிகளுக்கு இன்னும் தெளிவு ஏற்படவில்லை, அந்த அளவுக்கு அவர்களின் மேல்மாடி துருபிடித்திருக்க வேண்டுமென்று தெரிகிறது.

எனவேதான் ஆந்திர தமிழ்ப் பகுதி பிரச்னைகளில் சற்று நிதானபுத்தியுடன் அரசியல் தெளிவுடன் அணுக வேண்டிய பிரச்னைகளிலெல்லாம் வரட்டுக் பேச்சுக்களைப் பேசி, மூக்குடைபட்டு வருகின்றனர்

இக்கும்பலின் போக்கைப்பற்றி நாம் பொருட்படுத்தவில்லையெனினும் நாட்டுப் பிரிவினைக் கொள்கைக் கேற்ற சில சம்பவங்கள் ஆந்திரத்திலே அண்மையில் நிகழ்ந்திருப்பதை திராவிடத்தை தாயமாகக் கொண்டுள்ள அனைவருக்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஒவ்வொரு மாநில வருவாயை அந்தந்த மாநிலங்களுக்கே உரித்தானதாகச் செய்ய வேண்டும். தொழில், அரசியல், வியாபாரம் ஆகிய துறைகளில் ஒவ்வொரு மாநிலத்துக்கும் முழு உரிமை அளித்தல் வேண்டும். மாநிலங்கள் அனைத்தும் நேசமுறையில் இயங்க வேண்டுமே யல்லாது இந்தியத் துணைக் கண்டத்தின் ஒரு பகுதி மற்றொரு பகுதியை 'தர்மகர்த்தா' மனப்பான்மையில் தனது ஆதிக்கத்திற்கு உட்படச் செய்வது கூடாதென்பதே தி. மு. கழகம் கோறும் நாட்டுப் பிரிவினையின் அடிப்படைக் கொள்கையாகும்.

ஆனால் இன்று சுயராஜ்யம் என்ற பேரால், இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மாநிலங்கள் குறிப்பாக தென்னாடு, ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சி முறையிலிருந்ததைவிட மிகவும் விசித்திரமான ஜபர்தஸ்தில் அடக்கி ஆளப்பட்டு வருகிற தென்பதை நாம் பலமுறை எடுத்துக்காட்டி யிருக்கிறோம்.

வடநாட்டு ஆதிக்கத் திருவிளையாடல்களில் கவர்னர் பதவியும் ஒன்று! அப்பதவியை வகிப்பவருக்காக ஏறத்தாழ பிரிட்டிஷ் ஆட்சியின்போது செலவிடப்பட்ட பெருந் தொகையே இன்றும் செலவழிக்கப்படுகிறது. சுயராஜ்ய ஆட்சியில் கவர்னர் பதவிகள் தேவைதானா? அந்த கவர்னர்களுக்கு இன்றுள்ள அலுவல்களென்ன? அவைகளை முதலமைச்சர்களே நிறைவேற்ற முடியாதா? அவ்விதம் அவசியமாயின் பிரிட்டிஷ் ஆட்சியின் போது கொடுக்கப்பட்ட கொழுத்த சம்பளச் செலவு சுயராஜ்ய குடியரசு ...ஆட்சியிலும் கொடுக்கப்பட வேண்டுமா என்ற கேள்விகளை வடநாட்டு ஏகாதிபத்தியத்தை நோக்கிக் கேட்டது தி. மு. கழகம் தான் என்பதை நாடறியும்.

இன்று இதே கேள்வியை— ஆந்திரமும் கேட்கிறது. இப்போது நடைபெற்று வரும் ஆந்திர சட்டசபை கூட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவர் பி. சுந்தரய்யா இப்பிரச்னை குறித்து தீர்மானம் கொண்டு வந்தார். சட்டசபையில் இது குறித்து வாக்குவாதம் நடைபெற்றது. இறுதியில் தீர்மானம் ஓட்டுக்கு விட்டு தோல்வி யடைந்திருப்பினும் இந்த எண்ணத்தைத் தெரிவிக்கும் துணிவு ஆந்திர மக்களுக்கேற்பட்டிருப்பதையே நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஆந்திர காங்கிரஸ் தலைவரோ —ஆந்திராவிலிருந்து மத்திய சர்க்கார் என்ற பேரால் டெல்லி ஆதிக்கம் வசூலித்துச் செல்லும் வரிப்பணத்தைப் பற்றித் தலைநிமிர்ந்து கேட்டு வருகிறார்.

இந்தி மொழி ஆதிக்கத்திற்கு கல்லூரிகளில்—பொதுவாக கல்வித் துறையில் குனிந்து கொடுக்கக் கூடாது என்பதாக சென்னை ஆந்திரம், மைசூர், திருவாங்கூர்-கொச்சி, பலகலைக் கழகங்களின் துணைவேந்தர்களும், கல்வி நிபுணர்களும் ஆதிக்கக்காரர்களுக்கு அறிவு புகட்ட முனைந்துள்ளனர், இன்னும் இதுபோன்ற பல எடுத்துக்காட்டுகளை நம்மால் விவரிக்க இயலும். எனினும் சிலவற்றை மட்டுமே குறிப்பிட்டிருக்கிறோம்.

எனவே ஆந்திரம் ஆதரித்ததா —கேரளம் கேட்டதா என்ற பத்தாம் பசலிப் பல்லவியை பாடித் திரியும் தலைகொடுக்கும் பிரகஸ்பதிகள், இனியாகிலும் அரசியல் தெளிவு பெற்று தங்கள் கடமையை நிறைவேற்ற முனைவார்களாக.

—நக்கீரன்

●

கால் ஆணிக்கு மேல் பூசும் மருந்து

குதிக்காலிலும், பாதத்திலும், பள்ளம் பள்ளமாயும், சதை வளர்ந்து ஆணியைப்போல் ஏற்பட்டு நடக்கும்போது பாதமானது தரையில் வைக்கமுடியாமலும் கல் பட்டால் துடிதுடிப்பதுமாய் ஏற்படக்கூடிய வியாதியை ஆச்சரியகரமாய் கண்டிக்கக் கூடிய மருந்து இதுவே.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரூ 2-8-0 தபால் சார்ஜ இனும்

ஸ்ரீ முத்து மெடிகல் ஹால்

வியாசர்பாடி சென்னை-12

திராவிடன் சந்தா விவரம்

✶

உள்நாடு

ஆண்டு சந்தா	... ரூ.	8	0	0
ஆறுமாதம்	... ரூ.	4	0	0
தனிப்பிரதி	... ரூ.	0	3	0

வெளிநாடு

ஆண்டு சந்தா	... ரூ.	9	0	0
ஆறு மாதம்	... ரூ.	4	8	0
தனிப்பிரதி	... ரூ.	0	3	6

செய்திகள்

பம்பாய்

தாராவி

13—7—55 மாலை 8-30 மணிக்கு தாராவி தி. மு. க செயற்குழுக் கூட்டம் ஆரம்பமாகியது தோழர்கள் பி. எஸ். செட்டியா, சா தர்மராசன் திராவிடப்பண் பாடினார். இக் கூட்டத்திற்கு தோழர் இரா. மா சண்முகராசன் தலைமை வகித்தார். அதுபோது சடித நப் போக்குவரத்து வாசித்துக் காண்பிக்கப்பட்டது.

'புரட்சிப் பெண்' நாடகத்திற்கும் 'பூமர்சி' இதழுக்கும் டாக்கித் தொகை தரவேண்டியவர்கள் வரும் திங்கள் 15-ம் தேதிக்குள் செலுத்தி விட வேண்டும் என்றும் இல்லையேல் வெளியிடவிருக்கும் ஏழை வரவு செலவு அறிக்கையில் பாக்கி தரவேண்டியவர்கள் பெயர் எழுதப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப்பின் துணைச் செயலாளர் சா தர்மராசன் நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது.

மும்முனைப் போராட்ட நினைவு நாள்

17—7—55 மாலை 7 மணிக்கு 'திராவிடரக'த்தில் மும்முனைப் போராட்ட நினைவு நாள் கூட்டம் தோழர் வடலைக் குயில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் இரா. மா. சண்முகராசன் அவர்கள் பண் பாடினார். தோழர்கள் மா. அண்ணாமலை, எஸ். தங்கையா, நாஞ்சில் இராசாமணி ப. தி. மு. க பொதுச்செயலாளர் எஸ். தியாகராசன், ஆகியோர் மும்முனைப் போராட்டம் குறித்து விளக்கவுரையாற்றினார்கள். இறுதியாக கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1953-ம் ஆண்டு ஜூலை திங்கள் 15ம் நாள் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில் உயிர்நீத்த அறுவருக்கும் பம்பாய் தி. மு. க. (தாராவி கிளை) தனது வீர வணக்கத்தைச் செலுத்துகிறது.

மும்முனைப் போராட்டத்தின் போது அரசியலாரின் அடக்குமுறைக்கு ஆளாகி சிறை சென்ற திராவிட முன்னேற்றக் கழக வீரர்களுக்கு ப. தி. மு க. (தாராவி கிளை) தனது பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறது.

ஆதித்திராவிட சீர்திருத்தச் சங்கம்

17—7—55ல் திருநெல்வேலி பேட்டை வடக்குத் தெரு ஆதிதிராவிட சீர்திருத்தச் சங்கம் பம்பாய் கிளையின் ஆண்டு விழா திரு. கே. பி. வெள்ளசாமி அவர்கள் இல்லத்தில் திரு ரா. மு. சுப்பையா தலைமையில் நடந்தது, கீழ்கண்ட புத்தாண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுசெயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

தலைவர் ரா. மு. சுப்பையா, செயலாளர்கள் க. சு. வேல், சு. மகாராஜா, பொருளாளர் ம, மா. சுப்பையா.

கொலாபா

கொலாபா தி. மு. கிளைக் கழகத்தின் உறுப்பினர்கள் மாதாந்திரக் கூட்டம் தோழர் எஸ். மோகன் அவர்கள் தலைமையில் கூப்ரேஜ் திடலில் 9-30 மணிக்கு நடைபெற்றது, தோழர் ஏ. எஸ். தாஸ், ஏ, எஸ், அன்பரசு, ஆல் பி. பெருமாள், ஆகியோர் மும்முனைப்போராட்ட முழக்கங்களைகுறித்து பேசினார்கள். அடுத்து கணக்கு வழக்குகள் சரி பார்க்கப்பட்டு ஒத்துக் கொள்ளப் பட்டது. கழகத்திற்கு முரண்பாடாக நடந்த தோழர் ஒருவர் மீது தக்க நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப் பிறகு நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

சத்துவாச்சேரியில் தோழர் பசூல் சொற்போர்

3—7—55 வேலூரை அடுத்த சத்துவாச்சேரி தி மு. க. கூட்டம் கிளைக்கழக செயலாளர் தலைமையில் நடந்தது. அப்போது பாண்டியன் இளஞ்செழியன் எ. எல். சி. கிருஷ்ணசாமி ஆகியோர் பேசியபின் சாட்டாடி தோழர் வி. எ. பசூல் பேசியதாவது :—

இன்று வளர்ந்துவரும் தி. மு. க.வை நாடாளவந்தவர்கள் முதல் அவர்களுக்கு தோள்கொடுக்கும் விசித்திரப் பேர்வழிகள் வசை வரையாடுகின்றார்கள் ஆனால் வசைபாட வசைபாட நாம் வளர்ந்துக் கொண்டே வருகின்றோம் உலக நாடுகள் யாவும் ஆரம்பத்திலே அமெரிக்காவைப்போல் பொருளாதார வளம் பெறவோ அன்றி ருஷ்யாவைப்போல சுகவாழ்வு களஞ்சியமாகவோ இருந்துவிடவில்லை. அவைகளின் படிப்படியான வளர்ச்சிக்கு அவ்வத் தலைவர்கள் உழைக்க வேண்டியதாய் இருந்தது. உதாரணத்திற்கு வேண்டுமானால் அமெரிக்க விடுதலைக்கு ஒரு வாஷிங்டனும் அமெரிக்கப் அடிமையை போக்க ஒரு மார்டின் லூதரும் ருஷ்யாவின் விடுதலைக்கு ஒரு லெனினும் பருவமாச்சிக்கு ஒரு ஸ்டாலினும் துருக்கி நாட்டின் அடிமையை போக்க ஒரு கமால் பாஷாவும் பாக்கிஸ்தானத்திற்கு ஒரு ஜின்னாவைப் போலவும் திராவிடத்திற்கு ஒரு அண்ணாவைப் போலவும் ஏற்பட்டதால் தான் நாடு வளம்பெற்று விளங்கியது.

அன்று சோறும் திராவிடம் அவருடைய உழைப்பால் பொருளாதாரத்தில் அமெரிக்காவை போலவும், மறுமலர்ச்சியில் ரஷ்யாவைப் போலவும் அன்னாவின் காலத்திலே உலக வல்லரசுகளில் ஒன்றாக திராவிடமும் விளங்கும் என்பதில் ஐயம் வேண்டாம்! நம்முடைய நாடு நமக்காக வேண்டும் என்று நாம் சரித்திரத்தை சான்றுக்கு அழைத்து இலக்கியத்தை புரட்டிக் காட்டி ஆதாரத்துடன் கேட்கின்ற போதுதான் உரிமையுடன் முழங்குகின்ற போது தான் மறுத்துக்கூற துணிவில்லாதவர்கள் நாட்டைத் துண்டுபோடும் நாத்திகர்கள் என்று ஒரே வரியில் பதில் கூறி விடுகிறார்கள் கக்கன் போன்றவர்கள்.

நான் அவரைக் கேட்கிறேன் த. நா. காங்கிரஸ் கமிட்டியின் தலைவரவர்களே திராவிடத்திற்கு தென்னாட்டிற்கு காங்கிரஸ் உதவாது அதை கலைத்துவிட்டு நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் வந்து சேர்ந்து விடுங்கள் நாங்கள் கேட்கின்ற திராவிட நாடு நியாயமானதா இல்லையா என்று பார்க்க வேண்டுமானால் நாங்கள் கூறுகின்ற ஆதாரத்தை மறுக்க துணிவிருக்குமானால் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பாக சென்னை கடற்கரையிலே ஒரு கூட்டத்தை கூட்ட ஏற்பாடு செய்யுங்கள் அதில் உங்களுடைய தலைவர்களை அழைத்து நாடு பிரியக்கூடாது என்று பேசச் செய்யுங்கள் அதே நேரத்தில் அதேமேடையில் அதிகாரபூர்வமாக எங்கள் தலைவர்களை அழைத்து நாடு பிரிய வேண்டும் என்று பேசவையுங்கள். மக்கள் நீதிபதிகளாக நின்று தீர்ப்பு கூறட்டும் நாடு வேண்டுமா? வேண்டாமா? என்று துணிவிருந்தால் இந்த சவாலை ஏற்றுக் கொள்ளுங்கள்.

இங்கு ஒரு வேலை கஞ்சிக்கு லாட்ரி. இந்த நேரத்தில்தான் நேரு பண்டிதர் அயல் நாட்டிற்கு சென்றுவிட்டார். அமைதியை நிலைநாட்ட. இங்கே திராவிடத்திலே எழுச்சிக் குரல். விடுதலை முழக்கம் கொந்தளிக்கின்றது. பாஞ்சாலத்திலே சீக்கிஸ்தான் வேங்கை தாராசிங் பாய்ந்து விட்டது. அடைக்கப்பட்டிருக்கின்றது அந்த தாராசிங்கையும் விடுதலை விரும்பும் இரண்டாயிரம் தோழர்களையும். தடியடி துப்பாக்கி வேட்டுச் சப்தம். இதை அமைதிப்படுத்த வக்கில்லை, வகையில்லை. பறக்கின்றார் வெளியே பண்டிதர். அமைதியை நிலைநாட்ட என்று கூறியதோடு நேருவின் பஞ்சீலக் கொள்கையைக் கண்டித்தும் இந்திய கம்யூனிஸ்டின் இன்றைய நிலையை விளக்கியும் பேசினார்.

பெங்களூரில் பொதுச் செயலாளர்

17—7—55 ஞாயிறு பெங்களூர் பிளாட்டன் அப்பாவு பிள்ளை பள்ளியில் 11-மணிக்கு திரு. எஸ். ஜே. உசேன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கழகத்தோழர்கள் பெங்களூர் மாவட்டத்தில் வளரவேண்டிய நிலைமை பற்றியும் கண்ணியம், கடமை, கட்டுப்பாடு என்ற முறையில் நாம் பணி செய்ய வேண்டும். என்பதை குறித்தும் பெங்களூர் மாவட்டத்தின் சார்பில் மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 600, தரவேண்டுமென்றும் விளக்கம் தந்து, மாவட்ட தேர்தல் தோழமை மனப்பான்மையுடன் நடைப்பெற்றதை குறித்து அவரது மகிழ்ச்சியை தெரிவித்துக்கொண்டார். கடைசியாக மாவட்ட துணைச் செயலாளர் திரு மா. மன்னர் அவர்கள் நன்றி நவில ஊழியர்கள் கூட்டம் முடிவுற்றது.

12-30 மணிக்கு கிளைக் கழக செயலாளர்களை கொண்டும் மாவட்டப் பிரதிநிதிகளைக் கொண்டும் பொதுச்செயலாளர் அவர்களை உட்காரவைத்து புகைப்படம் ஒன்று எடுக்கப்பட்டது அன்று மாலை 3-30 மணிக்கு இலக்குமணபுரி தி. மு.க. எதிரில் பொதுச்செயலாளர் அவர்கள் கொடி ஏற்றி வைத்தார், மாலை 4 மணிக்கு சிராம்புரம் வ. உ. சி. திடலிலிருந்து மாபெரும் ஊர்வலம் இரட்டை குதிரைகள் பூட்டிய வண்டியில் பொதுச் செயலாளரையும் மாவட்டச் செயலாளரையும் வைத்து திரு ஆர். ஆறுமுகம் தலைமையில் முக்கிய பகுதியில் ஊர்வலம் சென்று 6 மணிக்கு சிக்கலால் பாக்கில் வந்து முடிவுற்றது.

திரு. எ. டி. பிரான்சிஸ் அவர்கள் தலைமையில் வரவேற்பு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் திரு. கனகசுந்தரம் பேசியபின் நீண்ட கைதட்டலுக்கிடையே பொதுச் செயலாளர் எழுந்து நின்றார். அக்கிப்பேட்டை தி மு. கழகம், சிராமபுரம் தி. மு. கழகம். மத்திய மாவட்டக் கழகம், மக்கள் மறுமலர்ச்சி மன்றங்களும் வரவேற்பு பத்திரங்கள் வாசித்தளித்தன. மற்ற கிளைக் கழகங்களின் சார்பிலும் தி. மு. க. ஆதரவு பெற்ற மன்றங்களும் ஆதரவாளர்களும் பொதுச்செயலாளர் அவர்களுக்கு கைத்தறி துண்டுகளும் மலர் மாலைகளும் மாநிலமாநாட்டுக்காக பண முடிப்பும் கொடுத்து மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டார்கள். மாநில மாநாட்டுக்காக வசூலான ரூ 108-2-0 மாவட்டச் செயலாளர் தோழர் பதி பொதுச்செயலாளரிடம் கொடுத்தார். வரவேற்புக்கு நன்றி தெரிவித்து பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றினார்.

பெங்களூர் மாவட்ட தி. மு. க. நிர்வாகிகள்.

17-7-55 ஞாயிறு காலை 10 மணிக்கு பெங்களூர் பிளாட்டன் அப்பாவு பிள்ளை பள்ளியில் திராவிட முன்னேற்ற கழகப் பொது செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் பெங்களூர் மாவட்ட தி. மு க. நிர்வாக குழு தேர்தல் நடைபெற்று, கீழ்க் கண்ட தோழர்களை தேர்ந்தெடுத்தது.

செயலாளர் எஸ். வி. பதி, துணைச் செயலாளர் எம். மன்னர், பொருளாளர் கே. விஜயரங்கம், பொதுக் குழு உறுப்பினர்கள் எ. டி. பிரான்சிஸ் எஸ். ஜே உசேன்.

இலங்கை

இராம நாதபுரம் மாவட்டம் செல்வரசன் கோட்டை (ஸ்ரீலங்கை) தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் பொதுச் சபைக் கூட்டம் 3—7—55 ஞாயிற்றுக்கிழமை கொள்ளுப்பட்டி காலி வீதி 510/4 இலக்க இல்லத்தில் தலைவர் திரு. அ. ச. வேல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முன்னுரைக்குப் பின் இணைச் செயலாளர் பொன்னம்பலம், பொருளாளர், மாதவன் ஆகியவர்களால் கடந்த பொதுச்சபை, செற்குழு நிகழ்ச்சிக் குறிப்புகள், கடித குறிப்புகள் வரவு செலவு கணக்குகள், நிதி வசூல் விபரங்கள் சமர்ப்பிக்க சபை ஒப்புக்கொள்ளப் பட்டது.

விவாத அரங்கில் தோழர்களான, எஸ். கே. மாயக்கிருஷ்ணன் எஸ். மாதவன், க. சிவானந்தம், எஸ். விஸ்வநாதன் கே. டி. இராமநாதன். இரா. ச. பொன்னம்பலம், வை. மு. அழகேசன், மற்றும் பலர் பங்கு பெற்று சிறப்பித்தார்கள்.

பொருளாளர் திரு. எஸ். மாதவன் அவர்கள் திருமண விஷயமாக தமிழகம் செல்வதால் அவர் சமர்ப்பித்த விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டு. புதிய பொருளாளராக திரு எஸ், கே மாயக் கிருஷ்ணன் அவர்கள் தெரிவு செய்யப் பட்டது.

தாயகத்தில் (காலஞ்சென்ற) திருமதி வி. எம். பெரியாளின் மறைவுக்கு அனுதாபத்தீர் மானம் நிறை வேற்றப் பட்டது.

மதுரை

மதுரை மாவட்ட தி.மு. கழக உறுப்பினரும் மதுரை மத்திய வட்டார (தி. மு. க. உட்கிளை) செயலாளரும் மதுரை நகர் தி மு. கழக முக்கிய ஊழியருமான தோழர் இரா. முருகேசன் அவர்களின் தந்தையார் திரு இராயசாமி கொத்தனார் 17—7—55 அன்று காலமானது குறித்து வருந்துவதுடன் தந்தையாரைப் பிரிந்து தவிக்கும் தோழர் முருகேசன் அவர்களுக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் மதுரை மாவட்ட தி. மு. கழகமும் மதுரை நகர் தி. மு. கழகமும் தனது ஆழ்ந்த அனுதாபத்தை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறது.

அருப்புக்கோட்டை கவிஞர் எம். எஸ். இராமசாமி

17—7—55 கவிஞர் எம். எஸ். இராமசாமி அவர்களுக்கு நிதியளிப்பு விழா திருநகரம் சாலியர் ஆரம்ப பாடசாலையில் இரவு 8 மணிக்கு தமிழ்ப் புலவர் திரு. சோ. கந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதுசமயம் நகராண்மைக் கழக உறுப்பினர் சோ. முத்துசாமி அவர்கள் கவிஞர் எம். எஸ். இராமசாமி அவர்களுக்கு ரூ 400 கொண்ட பணமுடிப்பு ஒன்று வழங்கியபின் தலைவர், கவிஞர் எம். எஸ் இராமசாமி அவர்கள் நமது திராவிட சமுதாய மக்களுக்கு செய்து வரும் தொண்டு பற்றியும் குறிப்பாக நடிந்து கொண்டுவரும் நெசவாளர் மக்களுக்காக செய்த சேவை குறித்து பேசிய பின் தற்சமயம் அவர் உடல்நிலை குறித்து அவருக்கு நாம் செய்ய வேண்டிய கடமையில் இதுவும் ஒன்று என நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார் கூட்ட முடிவில் தோழர் சோ. முத்துராமலிங்கசேது அவர்கள் கவிஞர்எம். எஸ். இராமசாமி அவர்களுக்கு அவசர செலவுக்காக ரூ. 400 கொடுக்கப்பட்டது என்றும் அன்னாரின் குடும்ப நிதி ஒன்று நிறுவி பெருந் தொகையாக அன்னாருக்கு வழங்க நமது இயக்கத் தோழர்கள் முன்வரவேண்டுமாய் கேட்டுக் கொண்டு நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

மும்முனைப் போராட்ட நினைவு நாள்

மதுரை தோழமைக் கழக ஆதரவில் 17—7—55 மதுரை வடக்கு வீதி இராமாயணச்சாவடி முன்பாக கொண்டாடப்பட்டது. தோழர் அ. பிச்சை. அவர்கள் தலைமையில் தோழர் இராஜா அவர்கள் கழகக் கொடி ஏற்றினார்.

புலிப் பாய்ச்சல்!

ச. வெ. பாண்டியன்

"விவசாயிகளே ஒன்றுக்கும் பயப்படாதீர்கள். இதோ நிலச்சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்போகிறோம்—கவலைகள் தொலையும்" என்று உழவர்கள்பால் அன்பு இருப்பதாகக் காட்டிக் கொள்வதற்காக மந்திரி மாணிக்கவேலரிலிருந்து முதன் மந்திரி காமராசர் வரை கர்ஜித்தனர்! 'ஏழைகள் பயப்படத் தேவையில்லை! ஏனெனில் நிலச் சட்டத்தின் மூலம் பணக்காரர்களின் பல்லைப் பிடுங்கி விடுவோம்!' என்று கனம் காமராசர் அவர்கள் பல இடங்களிலே பேசினர்!

வழக்கம்போல் காங்கிரஸ் மந்திரிகளின் பிரச்சார வேட்டாக இருக்குமோ என்று நினைத்து எப்போதுதான்—எப்படித்தான் வருமோ என்று கேட்டபோது 'புலிபோல்' வருகிறது என்றார் மந்திரி மாணிக்கவேலர்!

புலிப்பாய்ச்சலில் வருகிறதாம் சட்டம்! கேட்டபோது சிரிப்பாகத்தான் இருந்தது. சுற்றிக் கொண்டலைந்த மந்திரிகளுக்கு இந்த அளவு சொரணையாவது வந்திருக்கிறதே என்று பரவசப்பட்டோம்!

மந்திரிகள் கூற்றுப்படியே நிலச்சட்டம் வந்தாலும் இன்றைய சூழ்நிலைக்கு அது ஒத்துவருமா? இதனால் சாதாரண ஒரு விவசாயிக்கு மரக்கர் நிலம் கிடைப்பதாக வைத்துக் கொண்டால் அவனால் அதைப் பண்படுத்த முடியுமா? பணவசதி அவனிடம் தேவையான அளவு இருக்கிறதா? என்பதையெல்லாம் சட்டமியற்றுவோர் கவனித்து —அதோடு சம்பந்தப்பட்ட பல பிரச்னைகளையும் ஆலோசித்து அதற்குப் பரிகாரம் கூறினால்தான் உண்மையான முன்னேற்றத்தைக் காணமுடியும் என்று தி. மு. கழகம் எடுத்துக் கூறிவந்தாலும் இந்த அளவுக்காவது வந்த அரசியலாரின் போக்கை வரவேற்கவே செய்தது! நிலச் சட்டத்தை சீக்கிரமே அமுல் நடத்தும்படி வேண்டினோம்.

இன்றோ நிலைமை வேறாகி விட்டது. கொழுக்கட்டை என்று சொல்லி களிமண்ணை கொழுக்கட்டை போல் கொடுத்த கதையாகி விட்டது மந்திரிகளின் போக்கு! புலிப்பாய்ச்சலில் வருகிறது என்ற சட்டம் ஓரளவு புலிப்பாய்ச்சலில்தான் கிளம்பியது. ஆனால் அந்தப் புலியின் வேகம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது! ஏனெனில் கூண்டிற்குள் அடைபட்டுக் கிடக்கிறது! கூண்டின் சாவியோ இன்னொருவரிடம் இருக்கிறது!

புலிக்கு வேகம் இருப்பது ஓரளவு உண்மை. ஆனால் அந்தப் புலி அடைபட்டுக் கிடக்கும்போது எதைச் செய்ய முடியும்? திறந்து விட்டால்தானே ஓரளவாவது தனது திறமையைக் காட்ட முடியும்! இந்த நிலையிலேயேதான் சென்னை சர்க்காரின் நிலை ஆகி விட்டது!

அடைபட்டிருக்கும் புலியாக சென்னை மந்திரி சபையையும், கூண்டைத் திறக்கும் சாவி டெல்லியிடம் இருப்பதாகவும் நிறுத்திப் பாருங்கள் நிலைமை புரிந்துவிடும்!

முதன் முதலிலே எழும்பிய பேச்சில் புலிவேகம் தென்பட்டது! நிலச்சட்டம் கொண்டு வந்தே தீருவோம் என்ற தொனி அதிகரித்திருந்தது. வரவர அந்த உறுதி குலைந்து விட்டது!

சர்க்காரும் அதற்கேற்ப ஒரு கமிட்டியை நியமித்து நாடெங்கும் சுற்றி ஒரு உருவான திட்டத்தைச் சிபாரிசு செய்யும்படி செய்தது. அக்குழுவும் நாடெங்கணும் சுற்றி ஒரு சிபார்சையும் தந்தது. மந்திரிகளும் கோடை வாசஸ்தலமான ஊட்டியிலே தங்கி அதைப் பரிசீலனை செய்தனர். வரும் ஆகஸ்ட் மாதத்திற்குள் சட்டசபைக்குள் பிரவேசித்துவிடும் என்றும் கூறப்பட்டது குடுகுடுப்பைக்காரன் சொல்லுவது போல் மந்திரிகள் சொன்னதையும்—மந்திரிகள் கூடியாடி வேலை செய்து வருவதையும் பார்த்த நாம் நிலச் சட்டம் வந்தே தீரும் என்று நம்புவதற்கு இலக்காயிற்று! ஏனெனில் 'புலியின் வேகம்' அங்கு தென்பட்டது! இன்றோ நமது எண்ணமெல்லாம் சிதறியோடி விட்டது! அப்படி இப்படி என்றவைகளெல்லாம் ஒன்றும் இல்லை என்று கூறக் கூடிய நிலைக்கு வந்து விட்டது! புலியின் வேகம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்று உணர்த்தி விட்டது!

ஆமாம்! சட்டம் இவர்கள் நினைத்தபடி செய்ய முடியாது! டில்லியிடமிருந்து அனுமதி கிடைத்தால் தான் முடியும்! எனவே திட்டம் டில்லிக்கு அனுப்பப்பட்டிருக்கிறதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது!

எந்த அளவுக்கு மந்திரிகள் வாய்ச் சவாடல் அடித்தார்களோ, எந்த அளவுக்கு விவசாயிகள் பால் அருளை காட்டுவதாக நினைப்பதற்காக செய்ய முனைந்தார்களோ, எந்த அளவுக்கு அசகாய சூரத்தனமாக நடந்து வந்தார்களோ அதெல்லாம் தூள் தூளாகிவிட்டது! சொன்ன சொற்களை எல்லாம் மறந்து விட்டு இன்று டில்லி என்ன சொல்லுமோ என்று ஏங்கிக்கிடக்கின்றனர்! அது தான் இல்லை அங்காவது சட்டம் ஏழைகளுக்குச் சாதகமாக செய்யப்படுமா? அதுவும் தென்னாட்டு விஷயத்தில் டில்லி அக்கரை எடுத்துக் கொள்ளுமா? என்று நாம் கூர்ந்து பார்த்தால் இல்லை என்பதுதான் பதிலாகக் கிடைக்கும்!

மேலும் வடநாடு இன்று தொழில்துறையில் கணிசமான அளவில் மேல்நாடுகளைப் போட்டிபோட்டுக் கொண்டுமுன்னேறி வருகிறது. டாலர் உதவியுடனும்—மேல்நாட்டுத் தொழில் நுணுக்க நிபுணர்கள் உதவியும் தொழிற் துறையில் முன்னேற வழிவகைகளைத் தேடி வெற்றி பெற்று வருகிறது. ஆதிக்கமனப்பால் குடித்து தென்னகத்தை வேட்டைக் காடாக்கி வருகிறது! டாடா, பிர்லாக்களை உண்டு பண்ணி, அவர்களின் வளர்ச்சிக்கு கடன் கொடுத்தும்—மானியம் கொடுத்தும் வடநாடு அவர்களைப் பாதுகாத்து வருவதோடு—ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளுடன் தொடர்பு கொண்டு பெரிய தொழிற்சாலைகளை நிறுவவும் அதிகாரம் அளித்து ஊக்குவித்து வருகிறது! சுருங்கச் சொன்னால் வடநாட்டை இயந்திர நாடாக ஆக்கி, அதன் பொருளாதார நிலையை உயர்த்தி, தென்னாட்டை விவசாய நாடாக ஆக்கி அதன் மூலம் எப்போதும் ஆதிக்கம் செலுத்தி வேட்டையாடலாம் என்று மனப்பால் குடித்து துரிதமாக வேலை செய்கிறது!

இப்படிப்பட்ட டில்லியிடமிருந்து சென்னை என்ன லாபத்தைப் பெற்றுவிட முடியும்? நல்லது செய்ய நினைத்தாலும் 'டில்லி' இல்லை என்றால் இங்கும் 'இல்லை' என்றுதானே ஆகிவிடும்! இதற்கிடையில் வந்த காமராசர் அவர்களும் நிலச்சட்டத்தின் மூலம் 8-ல் 7 பேர்தான் பாதிக்கப்படுவர் என்று வேறு கூறிவிட்டார்! இது எதிர்பார்த்ததைவிட மிகுந்த ஏமாற்றத்தை தந்திருக்கிறது.

திருச்சியில் கூடிய மிராசுதார்கள் மாநாடும், தஞ்சையில் கூடிய மிராசுதார்கள் மாநாடும், அதோடு அவர்களனுப்பிய மிராசுதார்கள் தூதுகோஷ்டியும் காமராசரை இந்த அளவுக்கு வரவைத்து விட்டதோ என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது!

ஆனால் இவர்கள் யாருக்குப் புகலிடம் கொடுக்கப் போவதாக நினைத்துச் சட்டம் செய்தார்களோ அவர்களே மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நிலத்திலே பாடுபட்ட விவசாயிகள் விரட்டப் பட்டிருக்கிறார்கள்! தொழிலின்றி அவன் வாடும் நிலை மிகவும் பரிதாபகரமானது. இதை யாரும் மறுக்க முடியாது. கனம் நேரு அவர்கள்கூட நில வெளியேற்றத்தைச் சகித்துக் கொள்ள முடியாது என்று பேசக் கூடிய முறையிலே வளர்ந்து விட்டிருக்கிறது. சென்னை சர்க்கார் நில வெளியேற்றம் அதிகரிப்பதைத் தடுப்பதற்காக சீக்கிரத்தில் ஒரு சட்டத்தைக் கொண்டுவர ஆலோசனை செய்து வருவதாக சமீபத்தில் செய்திகள் வெளியாயின.

இருக்கிற நிலையில் வம்பையும் கூட்டிக் கொண்டு வந்தது போல வந்திருக்கிறது இச் சட்டம்—விவசாயிகளுக்கு! இல்லாவிட்டால் ஏனோதானோ வென்றாவது வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்குமல்லவா? சட்டம் செய்பவர்கள் இதையெல்லாம் முன்கூட்டியே யோசித்திருக்க வேண்டாமா? வீட்டைப் பழுது பார்க்கிறேன் என்று சொல்லி இடித்துத் தள்ளியது போலல்லவா ஆகிவிட்டது!

கஷ்டங்கள் அதிகரித்திருக்கின்றன. சரி சட்டமாவது நன்றாக உருவேறுமா என்றால் அதுவும் இல்லை என்றாகி விட்டது. 8-ல் 7பேர் பாதிக்கப்படமாட்டார்களாம்! மிராசுதார்களின் முணுமுணுப்புக்கு அவ்வளவு தூரம் பயந்திருக்கிறது சர்க்கார்! இந்த லட்சணத்தில் ஏழைகளுக்காகப் பாடுபடுகிறோம் என்ற பேச்சு வேறு!

சரி! அதுதான் போகட்டும் இந்த ஓட்டைச் சீர்திருத்தமாவது நடைமுறைக்கு வருமா என்றால் சென்னை டில்லியைக் காட்டுகிறது! டில்லியின் போக்கு நமக்குத் தெரிந்த ஒன்று!

ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் அதை நிறைவேற்றும் உரிமை சென்னைக்குக் கிடையாது! அதன்படி டெல்லியிடம் தான் இருக்கிறது! எனவேதான் சென்னையை கூண்டிற்குள் அடைபட்டிருக்கும் புலிக்கு ஒப்பிட்டோம், வீரம் அதற்கு இருந்தாலும் அதைக் காட்ட வழி இல்லை!

இருக்கின்ற கட்சிகளெல்லாம் சீர்திருத்தத்திலுள்ள குறைபாடுகளைத்தான் கூறினவே தவிர சட்டம் இயற்றும் திறன் இவர்களுக்கு உண்டா என்பதுபற்றி சிந்தித்தது கிடையாது! கம்யூனிஸ்ட் 'ஜனசக்தி' நிலச் சட்டம் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தீர்மானத்தைவிட மோசமானதே என்று கணித்ததோடு நின்றுவிட்டது. தினமணி, கதிர், மித்திரன், இந்து போன்றவைகளெல்லாம் விவசாயிகளின் வாழ்வு மலர்ந்துவிட்டதாக பூரித்து எழுதி விட்டன.

அவர்கள் கணிப்பெல்லாம்இப்படித் தான் இருந்தனவே தவிர வடக்கே லகான்பிடித்து நிற்கும் 'டெல்லி' அனுமதிக்குமா என்பது பற்றிச் சிந்திக்கவில்லை!

தி. மு. கழகத்தாராகிய நாம் தான் கூறுகிறோம், உண்மையிலேயே காமராஜர் சர்க்காருக்கு நல்லது செய்ய வேண்டும் என்று ஓரளவு ஆசை இருந்தாலும் 'டெல்லி' அதற்கு தடை போடும்—போடுகிறது என்பதாக! இப்படி நாம் கூறும்போது பார்த்தீர்களா துவேஷ வெறியை வேண்டுமென்றே இப்படிக் கூறுகின்றனர்! வடவருக்கு எதிராக துவேஷப் பிரச்சாரம் செய்கின்றனர் என்றெல்லாம் நம்மைக் கண்டித்து எழுதின எல்லா ஏடுகளும்!

இன்று நாம் சொன்னது நடக்கக் கண்டாவது யோசிக்க வேண்டுகிறோம்! இதோ ஒரு சாதாரண நிலச்சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது சென்னை சர்க்கார்! அதை அமுலுக்கு கொண்டு வர முடியவில்லை சென்னையால்! எனவே டில்லி சென்றிருக்கிறது. எடுத்ததெற்கெல்லாம் 'டில்லி' செல்ல வேண்டுமானால் எதைச் சாதிக்க முடியும்? 'டில்லியோ' ஆதிபத்திய போக்கு உள்ளதாக இருக்கும்போது எதைச் செய்ய அனுமதிக்கும்?

திராவிடம் தனி நாடாக வேண்டும்—என்று கூறுவதனால் ஏற்படும் பலனை இனியாவது அரசியலில் குருட்டாம் போக்கிலே நடை போடுபவர்கள் ஆலோசனை செய்வார்களாக!

பாகவதர் பாட்டு !

ஒரு சிலரது கூட்டுறவுடன் பாகதவர் துவங்கி யிருக்கும் மற்றொரு படக் கம்பெனி யான மூத்தமிழ் பிக்சர்ஸின் சார்பில் 'பாக்ய சக்ர' என்ற வங்கப் படத்தைத் தழுவிய ஒரு கதை 'காலச் சக்கரம்' என்ற பெயரில் ரேவதி ஸ்டுடியோவில் வளரப்போகிறது. இதற்கென ஏற்கனவே 'ராஜயோகி'க்காக எம். கே. தியாகராஜ பாகவதர் பாடி ரிக் கார்டு செய்யப்பட்டுள்ள சில பாட்டுகள் பயன் படுத்தப்படுமாம்! என். எஸ். கே., டி. ஏ. மதுரம் நகைச்சுவை பாகத்தில் நடிக் கும் இப்படத்தை சீனிவாசராகவன் டைரக்ட் செய்வார்.

ஒன்றே குலம் !

மாதுரி தேவி, மனோகர், சகஸ்ரநாமம், சாரங்கபாணி, சந்திரபாபு, பிரண்ட் ராம சாமி ஆகியோர் நடிக்கும் திருவேணி பிக்சர் ஸாரின் தயாரிப்பான "ஒன்றே குலம்" ஆகஸ்டு மாதம் திரையிடப்படு மென்று தெரிகிறது. இப்படத்தை, தோழர். எஸ். கே. சம்பந்தம் தயாரித்திருக்கிறார். டைரக்டர் என். கிருஷ்ணசாமி தம் கைவரி சையைக் காட்டியிருக்கிறார். படம் வெற்றி கரமாக நடைபோடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

நேருவுக்குத் துணையாகவா ?

'சிதாரா' என்ற படத்தில் வைஜயந்தி மாலா ஆடியுள்ள ஒன்பது நிமிஷ நடன மொன்றை டெலிவிஷன் மூலமாக உலகம் முழுவதும் காட்ட அந்தப் படத்தின் தயா ரிப்பாளர் பி. என் அரோரா ஏற்பாடு செய்து வருகிறார். இந்தக் கனவு நடனக் காட்சியில் வைஜயந்தி மகாராஷ்டிர நெய்தல் நில பெண்ணாகவும், முஸ்லீம் பெண்ணாகவும் கிராமியப் பெண்ணாகவும் தோன்றி மூன்று வித நடனத்தை ஆடியிருக்கிறார். நேரு ரஷ்யா சென்ற போது அதே விமானத்தில் இந்த நடனம் மட்டும் அடங்கிய பிலிம்சுருள் பெல்கிரேடிலுள்ள இந்திய தூதர் காரியா லயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாம்!

அங்கேயே முகாம் !

வட இந்திய மார்க்கெட்டிற்கு அதிக மான படங்களை அனுப்ப விரிவான திட் டம் போட்டிருக்கும் ஜெமினி, பம்பாய் நட் சத்திரங்களை சென்னைக்கு வரவழைத்துப் படம் தயாரிப்பதால் வீண் கால விரயமும் அனாவசியமான பணச்செலவும் ஏற்படுவ தால் அங்கேயே வேலையற்றிருக்கும் ஏதாவ தொரு ஸ்டுடியோவை விலைக்கு வாங்கிப் படப்பிடிப்பை அங்கு நடத்தினாலென்ன என்ற ஒரு யோசனை வாசனுக்கு இருந்து வருகிறதாகத் தெரிகிறது.

அப்படி ஒரு ஸ்டுடியோ பம்பாயில் அமைக்கப்படுமானால் 'இன்ஸானியத்' திற்கு அடுத்துத் தயாரிக்கும் ஜெமினியின் இந்திப் படங்களெல்லாம் பம்பாயிலே தயாராகலா மென எதிர்பார்க்கப் படுகிறது.

படங்களில் நரபலி கூடாது !

சினிமாக்களில் நரபலியை உயர்வாக்கி காட்டும் காட்சிகள் இருக்கக்கூடாது என்று மத்திய படத்தணிக்கை போர்டு முடிவு செய்துள்ளது: சென்ற மத்திய படத்தணிக் கைக் கூட்டத்தின்போது சினிமாக்களில் நர பலியைப்பற்றி புகழ்ந்து பேசவோ, பாடவோ, அல்லது அம்மாதிரிக் காட்சிகளை காட்டுவதோ கூடாது என ஓர் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. ஒருசில வெளிநாட்டுப் படங்களும் உள்நாட்டுப் படங்களும், இந்தத் தீர்மானத்தால் பாதிக் கப்படலாம் எனத் தெரிகிறது.

கைமேல் காசு !

வடநாட்டு திரைப்பட நட்சத்திரமான மீனாகுமாரி ஒரு படத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் என்று ஒப்பந்தம் செய்து கொண்டி ருந்தவர் இப்போது ஒருநாள் சூட்டிங்கிற்கு 2000 ரூபாய் அப்போதைக் கப்போது கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே புதிய ஒப்பந்தங்களைச் செய்து கொள்கிறார். அவர் இப்படி தினக்கூலி கேட் கக் காரணமென்ன தெரியுமா? ஒரு லட்ச ரூபாய்க்கு என்று ஒப்பந்தம் செய்யும் பட முதலாளிகள் அவர்களது படங்களை வருடக் கணக்கில் தயாரித்துக் கொண்டிருப்பது இருவருக்குமே சிரமமாக இருப்பதாக மீனா குமாரி கூறுகிறார்.

நாய்க்குப் பஞ்சம் !

பிரபல ஹாலிவுட் படத்தயாரிப்பாளர் களான எம். ஜி. எம். ஸ்தாபனத்தார் தயாரிக்கும் 'விம்போல் தெருவிலுள்ள பாராட்ஸ்கள்' என்ற படத்தில் கிரேஸ் கெலியுடன் நடிப்பதற்காக ஒரு நாயைக் கண்டு பிடிப்பதில் தீவிரமாக முயற்சி செய்து வருகின்றனராம். 'ப்ளஷ்' என்ற பாகத்தில் நடிக்கும் அந்த நாயின் பாகம் அந்தக் கதையிலேயே மிக முக்கியமான தாம் அந்த நாய் மிக சுறுசுறுப்புள்ளதாக வும் குறுகுறுப்பான பார்வையும் சங்கீதத் தை ரசிக்கக் கூடியதாகவும் இருக்க வேண் டுமாம்! இப்படிப்பட்ட நாய் இன்னும் கிடைக்கவில்லையாம்!

ஆசிரியர், அச்சிடுவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோமு அச்சகம் [illegible] மைலாப்பூர் ... தெரு, சென்னை 1.